# இரவி

கலை இலக்கிய காலாண்டுக் கதிர்



## க்ரைம் சீன்



ஈழத்து இசையமைப்பாளர் ராஜ்குமாருடன்

## சொல்லாமலே ஒரு சந்திப்பு



## நனவிடை தோய்தல்

பாட்டி சொன்ன மழைகாலக்கதைகள்



## கனடாவில் சூரிய கிரகணம்

# உங்கள் கனவுக்

குறும்படம்

முழு நீளத் திரைப்படம்

ஆவணத் திரைப்படம்

இசைத்திரைப்படம்

பின்புல இசையமைப்பு

இசை அல்பம்கள்

சொந்தக் குரலில் பாட

## அனைத்தையும் நனவாக்கிக்கொள்ள

சகலவிதமான ஆலோசனைகளும்

தயாரிப்புக்கு முந்திய செயற்பாடுகள் முதல்

தயரிப்புக்கு பிந்திய செயற்பாடுகள்வரையான

செயற்பாடுகள், சேவைகளுக்கும்

நாடுங்கள்

# கனவுப் பெட்டகம் மீடியா

# Dreem Box Media


**தொடர்புகளுக்கு**

dreamboxmedianetwork@gmail.com

0761174077




# இரவி

கலை இலக்கிய
காலாண்டு இதழ்

பிரதம ஆசிரியர்: நரேஸ் நியூட்டன்

கதிர் 01

ஆடி - புரட்டாதி 2024

உங்கள் படைப்புகளை அனுப்ப:

iravi.magazine@gmail.com

சகல ஆக்கங்களும் பாமினி யுனிக்கோட் எழுத்துருவில் தட்டச்சு செய்யப்பட்டு மென் பிரதியாக மின் அஞ்சல் மூலம் அனுப்பப்பட வேண்டும். தங்கள் பெயர் முகவரி மற்றும் புகைப்படம் ஆக்கத்துடன் அனுப்பி வையுங்கள்

புதுக்கவிதை

மரபுக் கவிதை

கட்டுரைகள்

சிறுகதைகள்

தொடர் கதைகள்

நேர் காணல்கள்

நூல் அறிமுகம்

நூல் ஆய்வு

சிரிப்பதற்கும் சிந்திப்பதற்கமான விடையங்கள்

ஓவியங்கள் போன்றவை வரவேற்கப்படுகின்றன. எழுதி எமது மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்புங்கள்.

“இவ்விதழில் வெளிவரும் ஆக்கங்களுக்கு அவற்றை எழுதியவர்களே பொறுப்பாளர்கள் என்பதை தெரியப்படுத்துகிறேன்”

## முதலாவது இதழை அலங்கரித்த ஆளுமைகள்

### புத்தக மதிப்புரை




### கட்டுரைகள்





### கதைகள்




### கவிதைகள்








# 'இரவி'

## முதலாவது கதிரின் உள்ளே....


கதிர் வீச்சு

நேர் காணல்

சொல்லாமலே ஒரு சந்திப்பு

புத்தக மதிப்புரை

கீதாரி

யேசு காவியம்

கட்டுரை

கனடாவில் சூரிய கிரகணம்

வயதானால் எதையும் ஏற்றுக்கொள்ளல் வேண்டும்

பெண்மையைப் போற்றுவோம்

இலங்கையில் முதன்முதலாக வெளிவந்த தமிழ்ப்பத்திரிகை

நான் படித்த ஆளுமை - அதிகமான நாவல்களைப் படைத்த ஈழத்தின் தமிழ் எழுத்தாளினி

குறுங்கதை

முயற்சி முட்டாளாய்ப் போனது

சிறுகதை

கிரைம் சீன்

நனவிடை நோய்தல் - பாட்டி சொன்ன மழை காலக்கதைகள்

கவிதைகள்

எதிலும் வெற்றிகொள்வாய்

ஆன்மாவின் பிரக்ஞையில்

மனச்சிறகுக்கு எல்லைகளே இல்லை

பாடாய்ப்படுத்தும் ரூபாய் நோட்டுகள்

முதுமை

சூர்ப்பனகையும் ஒரு பவளத்தீவும்

புத்தக வெளியீடு

துளிப்பாக்கள்

# இரவி

## கதிர் வீச்சு....1

உலகின் அனைத்துப்பகுதிகளிலும் பரந்து வாழ்ந்து தமிழ் மணம் பரப்பிக்கொண்டிருக்கும் என்னருமைத்தமிழ் உறவுகளுக்கு வணக்கம்.

நீண்ட நாட்களாகவே எனது மனதுக்குள் உறைந்து அவ்வப்போது வெளிப்பட்டு மீண்டும் உறைந்துபோய் இருந்த ஒரு விடயம் கலை இலக்கியத்துறையில் பங்களிப்புச்செய்துவரும் தமிழ் ஆளுமைகளுக்கு அவர்களது ஆற்றல்களை வெளிப்படுத்த ஒரு களம் அமைத்துக் கொடுக்கவேண்டும் என்பது. அதற்கமைவாக ஒரு சிற்றேட்டை முதற்கட்டமாக ஆரம்பிப்பது அதை தொடர்ந்து அதற்கு வலு சேர்கக்கூடிய ஏனைய செயற்பாடுகளையும் ஆரம்பிப்பது. பல்வேறுபட்ட காரணங்களால் அந்த எண்ணம் நீண்ட காலமாக தொடர்ச்சியாக தடைப்பட்டு காலம் கடந்துகொண்டே வந்தது. இந்த வருட இரண்டாவது காலாண்டில் அந்த நோக்கம் கைகூடுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

உலகம் பூராகவும் பல சிற்றேடுகள் அல்லது சஞ்சிகைகள் நீண்ட காலமாக வெளிவந்து கொண்டுதானிருக்கின்றன, சில சஞ்சிகைகள் பல்வேறு காரணங்களால் வெளிவருவது நின்றுபோய்விட்டது. முக்கியமாக அச்சுப் பதிப்பிற்கான விலை அதிகரிப்பும் படிப்படியாக இலத்திரனியல் ஊடகங்களின் வளர்ச்சியால், பல வாசகர்கள் அதற்குள் மூழ்க, அச்சுப் பிரதிகளின் வாசகர்களின் எண்ணிக்கையில் ஏற்பட்ட வீழ்ச்சி மிகமுக்கியமான காரணமாக இருப்பதை அவதானிக்கமுடியும். அத்துடன் ஆசிரியர்கள் தமக்கு அடுத்து அந்த சஞ்சிகைகளை கொண்டு செல்வதற்கான சரியான ஏற்பாடுகளை செய்யாமல்விட்டமையும் ஒரு காரணமாக எடுத்துக்கொள்ளலாம். வெளிவந்துகொண்டிருக்கின்ற அனைத்து சஞ்சிகைகளும் சிறப்பாக வெளிவந்துகொண்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. இந்தகைய சூழ்நிலையிலும் இப்படி ஒரு சஞ்சிகையை வெளிக்கொணர்வதற்கு காரணம், ஏதோ ஒரு வகையில் வாசகர் மத்தியில் சேர்ப்பித்து வாசிக்கும் பழக்கத்தை மேலும் மேலும் வலுப்பெறச் செய்வதற்கும், ஆளுமைகளுக்கான களத்தை அமைத்துக்கொடுப்பதற்குமேயாகும். அத்தோடு ஆர்வமுள்ள வளர்ந்துவரும் எழுத்தாளர்களுக்கும் இந்த சஞ்சிகையை அவர்களது ஆக்கங்களை வெளியிடுவதற்கான மற்றொரு தளமாக அமைத்துக்கொடுப்பதும் இன்னொரு நோக்கமாக திர்மானித்திருக்கிறோம்.

இந்த சஞ்சிகையை வெளியிட வேண்டும் என்ற ஆர்வம் அரும்பிய காலம் முதற்கொண்டு அதற்கு ஒரு சிறந்த பெயரை வைக்கவேண்டும் என்ற எண்ணம் துளிர்விடத்தொடங்கியிருந்தது. அதற்கமைய பல்வேறு பெயர்கள் மனதிலே அவ்வப்போது வந்து சென்றுகொண்டே இருந்தது. அவற்றுள் சில பெயர்கள் எமது தாமதத்தால் வேறுசிலர் தங்கள் வெளியீட்டுக்கு வைத்ததும் அப்பெயர்களை நாம் வைக்கமுடியாமல் கைவிட வேண்டியதாயிற்று. ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு பெயர் சிறப்பான பெயராக தென்பட்டாலும் இந்த சஞ்சிகையை எப்படியாவது இந்த வருடத்தின் இரண்டாவது காலாண்டில் அதாவது சித்திரை மாதத்தில் சித்திரை, வைகாசி, ஆனி ஆகிய மூன்று மாதங்களை உள்ளடக்கிய காலாண்டுக்கான சஞ்சிகையையாக வெளியிட்டுவிட வேண்டும் என முடிவு செய்த அந்த கணத்தில் மனதில் திடீரெனத் தோன்றிய பெயர்தான் ***'இரவி'***. இந்தப் பெயர்பற்றி நட்பு ஆளுமைகள் சிலருடன் கலந்துரையாடியபோது அவர்களது ஆதரவும் இந்தப் பெயருக்கு இருந்தது. அத்தோடு இந்தப் பெயரில் மற்றொரு சஞ்சிகை வெளிவருகின்றதா என தேடிப்பார்த்தபோது அப்படியொன்று வெளிவருவதாக அறியக்கிடைக்கவில்லை. ஆகவே இந்தப் பெயரையே சூட்டிவிடலாம் என முடிவெடுத்து பெயர் வடிவமைப்பு மேற்கொள்ளப்பட்டது. . இந்த பெயர் தமிழில் ஒரு சிறந்த சொல் ஆயினும் வழக்கத்தில் பயன்பாட்டில் அரிதாகவே இருந்து வருகிறது. ஆக ***சூரியனுக்***கு மறு பெயர்களில் ஒன்றான ***'இரவி'*** எமது சஞ்சிகை மூலம் வாசகர் உதட்டிலிருந்து அடிக்கடி பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாக மாறும் என்பது திண்ணம். அத்தோடு சஞ்சிகையின் உருவாக்கத்திற்கு தேவையான ஏனைய ஆரம்பகட்ட நடவடிக்கைகள் அனைத்தையும் ஆரம்பித்தமையின் பெறுபேறே ***'இரவி'*** என்ற இந்த சிற்றேடு இன்று உங்கள் பார்வைக்கு கிடைத்தமைக்கு காரணமாய் அமைந்தது

ஆளுமைகளுக்கும் தங்கள் எழுத்துக்களினூடான படைப்புகளுக்கூடாக வாய்ப்பளிப்பது எங்கள் எதிர்பார்ப்பாகும். மாணவர்களின் எழுத்தாற்றலை வளர்க்கும் நோக்கோடு அவர்களுக்கான பகுதியை ஒதுக்கி மாணவச்செல்வங்களுக்கும் இதில் எழுதுவதற்கான வாய்ப்பை வழங்க எதிர்பார்க்கிறோம். இது அவர்களை எதிர்காலத்தில் முத்தமிழுக்குத்தங்கள் பங்களிப்பை வழங்கும் சிறந்த எழுத்தாற்றல்மிக்க ஆளுமைகளாக உருவாக்கும் என்பது எமது நம்பிக்கை. ஆகவே பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், இதன்பொருட்டு பிள்ளைகளை ஊக்குவிக்குமாறு வேண்டுகின்றோம்.

பெண்மையைப் போற்றுவோம் என்ற பகுதியினூடாக எமது பகுதிகளில் வெவ்வேறு வகையான சாதனை-களை மேற்கொள்ளும் பெண்கள் பற்றிய படைப்புகளையும் ஒரு பகுதியில் வெளியிட எதிர்பாக்கிறோம். அதற்கு பொருத்தமான ஆக்கங்களை எழுதி அனுப்புவதனூடாக அவர்களை நாம் கௌரவிப்பதற்கு எமக்கு துணை புரிய படைப்பாளர்களுக்கு இயலுமாகவிருக்கும்.

இந்த சஞ்சிகளை வெளியீட்டின் தொடர் முயற்சியாக மேலும் பல சிறந்த செயற்பாடுகளை முன்னெடுக்க ஏற்கனவே திட்டமிட்டிருக்கிறோம். அவை பற்றி அவ்வப்போது வாசகர்களுக்கு தெரியப்படுத்துவோம். இந்த விடயங்கள் தெரியப்படுத்தும்போது அவற்றில் ஆர்வம் உள்ளவர்கள் எம்மோடு கைகோர்க்குமாறு அன்புடன் அழைக்கிறேம்.

தற்போது **'இரவி'** இதழின் முதலாவது கதிர் கணணிகள் அல்லது கைப்பேசிகள் மூலமாக உங்களை அடைந்திருக்கிறது. ஒரு சஞ்சிகையை உருவாக்கி வாசகர்கள் கரங்களில் சேர்க்கும்வரையுள்ள பணிகள் சாதாரணமானவை அல்ல. இதற்கான ஒத்துழைப்பை பலரிடம் கேட்டிருந்தோம். அதற்கான பச்சை விளக்குகள் இன்னமும் எங்கிருந்தும் ஒளிர்விக்கப்படவில்லை. இருப்பினும் எமது முயற்சியை தளரவிடாது மற்றொரு நண்பரின் சில உதவிகளுடன் உங்களிடத்தில் சேர்ப்பித்திருக்கிறோம். சித்திரை— ஆனி காலண்டிதழக வெளியிடவிருந்த இந்த இதழ் சகல பணிகளும் முடிந்து வெளியிடத் தயாராகவிருந்தபோது ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு மீண்டும் ஆரம்பத்திலிருந்து சகல வடிவமைப்பு வேலைகளையும் செய்யவேண்டிய நிக்கு எம்மை தள்ளிவிட்டது. இதனால் இந்த இதழ் ஆடி — புரட்டாதி காலாண்டிதழாக வெளிவருகிறது. அடுத்த இதழ் ஐப்பசி —மார்கழி இதழாக வெளிவரும். இதை படித்து உங்கள் கருத்துகளையும் ஆலோசனைகளையும் எமக்கு வழங்குவதன் மூலம் வெளியீட்டுத் தரத்தை மேலும் உயர்த்த எமக்கு வாய்ப்பாக இருக்கும். அச்சுப்பதிப்பின் மூலம் இதழை கொண்டுவருவது அதிக நிதிச் செலவுக்குட்பட்டது. தற்போது மின் இதழாக இதனை வெளிக்கொணர்வதிலும் நிதி செலவுகள் இருந்தன அவற்றை நாமாகவே முகம்கொடுத்துள்ளோம். ஆகவே அச்சிதழுக்கான அனுசரணையாளர்கள் எம்மோடு இணையும் பட்சத்தில் அல்லது நாம் அதற்கு தேவையான முழு நிதியையும் சுயமாக உருவாக்கிக்கொள்ளும் பட்சத்தில் அச்சிதழாக வெளிக்கொணர்வதைப்பற்றி ஆலோசிப்போம்.

எம்மோடு உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் இருந்து கைகோர்க்கவிரும்பும் எழுத்தாளர்களையும் ஆர்வலர்களையும் மகிழ்சியுடனும் ஆர்வத்துடனும் வரவேற்கிறோம். தொடர்பாளர்கள், இணைப்பாளர்கள், படைப்பாளர்கள், வடிவமைப்பாளர்கள், ஓவியர்கள் மற்றும் நிதிப்பங்களிப்பாளர்களாக நீங்கள் இணைந்துகொள்ளமுடியும் என்பதையும் இவ்விடத்தில் தெரியப்படுத்துகின்றேன்

முதலாவது கதிரின் வெளியீட்டில் என்னோடு இணைந்து செயற்பட்ட இராஜ்குமார் அவர்களுக்கும் எனது அறிவிப்பை பார்த்ததும் உடனடியாகவே தங்களுடைய படைப்புகளை அனுப்பி இந்த இதழை சிறப்பாக வடிவமைக்க ஒத்துழைப்பு வழங்கிய சகல படைப்பாள ஆளுமைகளுக்கும் எனது உளம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். மீண்டும் அடுத்த கதிரில் சிறந்த மேலும் பல விடயங்களோடு சந்திக்கும் வரை அனைவருக்கும் நன்றிகலந்த வணக்கங்கள்

இவ்வண்ணம்

பிரதம ஆசிரியர்

நரேஸ் நியூட்டன்






**வணக்கம் ராஜ், எப்படி சுகமாய் இருக்கிறீர்களா? சொல்லாமலே உங்களை சந்திக்க வந்தமைக்கு மன்னிக்கவும்.. ராஜ் என்று உங்களை தெரியும் இருந்தலும் எமது 'இரவி' சஞ்சிகைக்காக உங்களைப்பற்றி சுருக்கமாக கூறுங்களேன்.**

வணக்கம்... வணக்கம்... தங்கள் சஞ்சிகை 'இரவி'யின் பொருட்டு என்னை சந்திக்க வந்தமைக்கு எனது நன்றிகளும், சஞ்சிகை சிறப்புற எனது வாழ்த்துகளும்.

என்னுடைய பெயர் மலர்ராஜன் கிறிஸ்ரி ராஜ்குமார். இசைத்துறையில் சுருக்கமாக எம். சீ. ராஜ் என அழைப்பார்கள். யாழ்ப்பாணம் குரும்பசிட்டி எனது பிறப்பிடமாக இருந்தாலும் வளர்ந்தது, படித்தது அனைத்தும் எனது தந்தையின் ஊராகிய கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்திலுள்ள திருக்கோவில் ஆகும். கடந்த பல வருடங்களாக எனது கலைப்பயணத்தின் தேவைகருதி கொழும்பில் வசித்துவருகிறேன்.

**இசைத்துறைக்குள் உங்களுடைய பிரவேசம் குறித்து விசேடமாக குறிப்பிடக்கூடிய ஏதாவது காரணங்கள் உண்டா?**

இசையை நான் எனது பத்தாவது வயதில் கற்கத் தொடங்கியபோது முறையாக கர்நாடக சங்கீதம் கற்கும் பாக்கியம் கிடைத்தது. அனேகமாக பதின்நான்கு வருட அனுபவத்தோடு எனது முதல் இறுவட்டை 2006ஆம் ஆண்டில் வெளியீடு செய்தேன். அப்போதிலிருந்து இசைத்துறையின் மீது இருந்த ஈர்ப்பு ஒரு துணிவாகவே மாறியது. இசைத்துறையே என்னுடைய வாழ்வின் பிரதான பாகமாக உணர்ந்தேன். இசையினாலே உள்ளங்களை ஈர்க்க முடியும் என்பதும் அது இயல்பிலேயே எனக்குள் ஒரு கொடையாகவும் பொறுப்பாகவும் இருப்பதாக உணர்ந்ததால் அத்துறையை என் முழுநேரப் பணியாக தொடர்கிறேன்.

**நீங்கள் இதுவரை இசையமைத்த பாடல்கள் எத்தனை? அவற்றில் வெளியீடு செய்யப்பட்ட பாடல்கள் எவை என சற்று தெளிவுபடுத்துங்களேன்.**

துல்லியமாக கூறுவதற்கமைவாக என்னால் இன்னமும் புள்ளிவிபரங்கள் சரியாக ஆவணப்படுத்தப் படவில்லை. அண்ணளவாக ஆறு இறுவட்டுக்கள் உட்பட எண்பதுக்கு மேற்பட்ட பாடல்கள் இசையமைத்திருக்கிறேன். வெளியிடப்படாத பாடல்களையும் சேர்த்தால் நூறு பாடல்களுக்கு மேல் இருக்கும்.

**ஆஹா 100 பாடல்கள்... ஆச்சரியமாக இருக்கிறது... ஆவணப்படுத்தல் என்பது மிகவும் முக்கியமானது. அவையே வரலாற்றில் எம்மைப்பற்றி பூரணமாக தெரியப்படுத்தும் பொக்கிசங்கள். ஆகவே தற்போதிருந்தாவது ஒவ்வொன்றாக பட்டியலிட்டு ஆவணப்படுத்துவீர்களென்ற நம்பிக்கையோடு அடுத்த விடயத்துக்கு நகர்கிறேன். நீங்கள் ஆரம்பத்தில் ஆசிரியர் தொழிலில் இருந்ததாகவும் பின்னர் அதிலிருந்து விலகியதாகவும் அறிகிறேன் அதைப்பற்றி கூறமுடியுமா?**



ஆசிரியத் தொழில் என்பதை விட ஆசிரிய சேவை என்பதே எனக்கு மிகவும் பிடித்தமான சொற்பிரயோகம். ஆசிரிய சேவை எனக்கு மிகவும் பிடித்தமான ஒன்று. வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கற்று ஆசிரிய சேவையில் இணைந்து பணியாற்றினேன். ஐந்து வருடங்களின் பின்னர் ஒருகட்டத்தில் இசைத்துறையா அல்லது ஆசிரியப் பணியா என்ற தேர்வுசார் நிர்ப்பந்த சூழலில் ஏதாவது ஒன்றை தேர்வு செய்ய வேண்டிய மன நிலையில் இருந்தேன். ஆசிரியப்பணியை தொழிலாக செய்வதாயிருந்தால் அதற்கு என்னை முழுமையாக அர்ப்பணிக்க வேண்டும். இல்லாவிட்டால் நம்மை நம்பி கற்கும் மாணவர்களை ஏமாற்றுவதற்கு அது சமமாகும் என்று மனதில்தோன்றியது. அதே வேளை இசைத்துறையில் முழுமையாக ஈடுபடாவிட்டால் அதிலும் சாதிக்க இயலாது என்பதையும் உணர்ந்துகொண்டேன். கற்பித்தலை பணியாக மேற்கொள்ளும் ஒருவர் மற்றொரு துறைக்கு முழுமையாக தன்னை அர்ப்பணித்தல் என்பது மிகவும் கடினமான அல்லது இயலாத காரியம் என்பதை உணர்ந்து அதை சிந்தித்துப் பார்த்தேன். இந்த மனப்போராட்டத்தில் இசை முன்னிலையில் இருந்தது. என்னால் இசையை பிரிய முடியாது என்பது எனக்குத் தெரியும். அதனால் ஆசிரிய சேவையை துறந்து இசைக்குள் முழுமையாக என்னை ஈடுபடுத்திக்கொள்ள ஆரம்பித்தேன். இருப்பினும் கற்பித்தலை நேரம் கிடைக்கும்போதெல்லாம் தேவைப்படுபவர்களுக்கு செய்கிறேன்.

**சிறப்பு... சிறப்பு... நல்ல உறுதியான தீர்மானம். ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் சரியான தீர்மானத்தை எடுக்காதுபோனால் அது பின்னர் பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்தும் என்பது எனது நம்பிக்கை. நீங்கள் அதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இருப்பது எனது கருத்துக்கு உரமூட்டுவதோடு மகிழ்ச்சியும் தருகிறது. தற்போதய ஈழத்து தமிழ் இசைத்துறை வளர்ச்சி பற்றிய உங்கள் பார்வை என்னவாக இருக்கிறது என்பதை சற்று விவரிக்க முடியுமா?**

மிக்க மகிழ்ச்சியும் நன்றிகளும்.. ஈழத்து தமிழ் இசைத்துறை வணிக ரீதியாக பெரிய அளவுக்கு இன்னும் உருவாகவில்லை, ஆனாலும் தொழிநுட்ப ரீதியாக உலகமயமாக்கலில் இன்றைய கால சூழலில் சர்வதேச தரத்தோடு போட்டியிடக்கூடிய அளவுக்கு பல இசைக்கலைஞர்கள் உருவாகி வளர்ந்திருக்கிறர்கள். பல்வேறு வெளி நாடுகளிலும் குறிப்பாக ஐரோப்பிய நாடுகளிலும் கனடா அமெரிக்கா போன்ற ஏனைய நாடுகளிலும் ஈழத்து இசைக்கலைஞர்கள் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஈழத்து இசைக்கென இரசிகர்களின்

பங்களிப்பு இன்னும் ஆழமாக தேவைப்படுகிறது என்பதே உண்மையாகும். அவ்வாறில்லாவிட்டால் ஈழத்தின் இசைத் தனித்துவம் கேள்விக்குரியதாகிப் போய்விடும். ஏனெனில் வணிக ரீதியான வெற்றிதான் சமகால சூழலில் ஒரு தனித்துவத்தை நிலைநாட்ட மிகவும் முக்கியமான தேவையாக உள்ளது.




**தாங்கள் இசைத்துறைக்குள் காலடி எடுத்து வைத்து பலவருடங்களாகிவிட்டது என்று குறிப்பிட்டிருந்தீர்கள். இந்த நீண்ட பயணத்தின்பின் தற்போதய உங்களுடைய செயற்பாடுகள் என்னவாக இருக்கிறது?**

தற்போது இசைத்துறை சார்ந்த என் செயற்பாடுகளை திரைத்துறைக்குள் இணைத்து செயற்படுகிறேன். அதன் பயனாக தற்போது இசையியல் திரைப்படமொன்றை இயக்கும் முயற்சியில் ஈடுபட்டு சில வெற்றிக்கட்டங்களை அடைந்திருக்கிறேன். இதுபோக எனது இசையமைப்பில் தற்போது இரண்டு படங்களுக்காக பணியாற்றிக்கொண்டு இருக்கிறேன். எனது பாடல்களை ஒரு தொகுப்பாக வெளியிடுவதற்கான வேலைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**நல்லது விரைவில் தங்கள் தற்போதை படைப்புகள் முற்றுப்பெற்று எங்கள் பார்வைக்கு வர வாழ்த்துகள். சிறந்த பல எதிர்பாராத பதில்கள் உங்களிடமிருந்து கிடைப்பது மனதை உற்சாகப்படுத்துகிறது. சரி நீங்கள் தற்போது முழு நீளத்திரைப்படம் ஒன்றை இயக்கி ஒரு குறிப்பிட்ட கட்டத்தை அடைந்துள்ளதாக குறிப்பிட்டீர்கள், இசைத்துறையிலிருந்துகொண்டு திரைப்படம் எடுக்கவேண்டும் என்று திரைப்படத்துறையின் பக்கம் உங்கள் மனதை திசைமாற்ற காரணம் என்னவென்று அறியலாமா?**

நன்றி... நன்றி... தங்கள் வாழ்த்துகளுக்கு நன்றி... அதைத்தான் நானும் எதிர்பார்த்து அதற்கான முழுமையான செயற்பாடுகளில் ஈடுபட்டுவருகிறேன். இசைத்துறை குறிப்பாக தமிழ் இசைத்துறை

மற்றும் இசைக்கலைஞர்களைப் பொறுத்தவரை பெரும்பாலும் சினிமா சார்ந்தே அறியப்படுகிறார்கள் என்பது என் தனிப்பட்ட கருத்து. திரைத்துறை வாய்ப்புக்களை அடைவதற்கான முயற்சிகளை அத்திவாரமிடுவதென்பது இன்றியமையாத்தாகும். இசைத்துறை மட்டுமன்றி எழுத்துத்துறையிலும், நாடகத்துறையிலும் தேர்ச்சி பெற்றவனாக தகுந்த குருமார்களிடம் கற்றமையினால் என்னால் திரைக்கதைகளை எழுதி இயக்க முடியும் என்ற நம்பிக்கை என்னை திரைப்படத்துறையை நோக்கி உந்தித் தள்ளியது. அது மட்டுமன்றி ஒரு தனித்துறையை சார்ந்திருக்குமளவு ஈழத்தில் கலைத்துறை இன்னும் வளர்ச்சியடையவில்லை. எனவே ஒரு ஈழத்துப் படைப்பாளி பல்வேறு துறைகளில் செயற்படுவதற்கான ஒரே தளமாக நான் திரைப்படத் துறையை உணர்கிறேன்.

**நல்ல உறுதியான நிலைப்பாடுசார் பதில். அத்தோடு மற்றொருவிடயத்தையும் தங்களிடம் கேட்டுத் தெரிந்துகொள்வது சிறப்பு என கருதுகிறேன். அதாவது தற்போதய ஈழத்து சினிமா பற்றிய உங்கள் பார்வை பற்றி சுருக்கமாக உங்கள் நிலைப்பாடு.**

ஈழத்துச் சினிமா குறிப்பிடத்தக்க அளவில் செயற்படு நிலையில் இருந்தாலும் வர்த்தக மற்றும் தொழிநுட்பத் துறையில் இந்திய மற்றும் உலக சினிமாக்களுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்தங்கிய நிலையில் தான் உள்ளது. படைப்பாளர்களின் முயற்சிகளுக்கேற்ப முதலீட்டாளர்களும், முதலீடுகளும் தேவைப்படுகிறது. தயாரிப்பாளர்கள் அதிகம் அதிகமாக தேவைப்படுகிறார்கள். மொழிகளைக் கடந்து ஈழத்தின் சினிமா, உலகத்தரத்தில் பார்வையாளர்களை அணுகுவதே தற்போது ஆரோக்கிமானதும் அவசியமானதுமான தேவையாக உள்ளது.

**சிறப்பு அதனோடு தொடர்புடையதாக இன்னொரு விடயம் அதாவது ஈழத்து தமிழ் திரைப்படங்கள் அநேகமானவை வெற்றிபெறுவதில்லை என்பது பொதுவான நிலைமை இந்த நிலைமைக்கு காரணமென நீங்கள் அவதானித்த ஏதாவது விடயங்கள் பற்றி குறிப்பிடமுடியுமா?**

ஈழத்தைத் தாண்டி உலக ரசிகர்களை திருப்திப்படுத்தாதவரை ஈழத்து திரைப்படங்களின் வணிக வெற்றி கடினமானது. உலக தரம் என்பது சர்வதேச பார்வையாளர்களை நோக்கிய ஒரு பயணம். அதற்கு இன்னும் ஆழமான பார்வை அவசியமாகிறது. கதைத் தெரிவுகளில் ஈழத்து எல்லைகள் பெரிதாக இருக்க வேண்டும் என்பது எனது கருத்து.

**தொடர்ச்சியாக சிறப்பான ஒரு கலந்துரையாடலாக இது சென்றுகொன்டிருக்கிறது. நேரம் கடந்து சென்றுகொண்டிருக்கின்றமையால் மற்றொரு விடயத்துடன் இந்த சந்திப்பை நிறைவுசெய்யலாமென கருதுகிறேன். ஈழத்து தமிழ்த்திரைப்பட படைப்பாளர்களுக்கு நீங்கள் கூறும் ஆலோசனைகள்.**

இதற்கு முதல் பதிலே பொருத்தமானது என கருதுகிறேன். அத்தோடு நாம் எமது தமிழ்த் திரைப்படத்துறை வெற்றியடைய வேண்டுமாயின் கடினமான உழைப்புடன் கூடிய தேடலும், கற்றல் மனநிலையும், குழுவாக இணைந்து செயற்படும் முயற்சியும் இன்றியமையாததாகும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும்.

**ஒரு சிறந்த மனம் திறந்த கலந்துரையாடலில் ஈடுபட்ட மனத்திருப்தி ஏற்படுகிறது. தங்களுடைய சிறப்பான கருத்துகளுக்கும் அவற்றை வழங்குவதற்காக இந்த நேரத்தை ஒதுக்கித்தந்தமைக்கும் 'இரவி' சஞ்சிகை சார்பாக எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி வணக்கம்.**


நீங்கள் என்னுடனான கலந்துரையாடலுக்கு நேரத்தை ஒதுக்கி என்னை சந்தித்தமைக்கு எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறேன். தங்கள் வெளியீடு சிறப்பாக அமைய எனது வாழ்த்துகளை மீண்டும் கூறிக்கொள்கின்றேன். நன்றி வணக்கம்



## புத்தக மதிப்புரை

# புத்தகம்: கீதாரி

**ஆசிரியர்: சு. தமிழ்ச்செல்வி**




கீதாரி என்னும் இந்நாவல் ஒரு இனக் குழுவைப் பற்றிய கதை.

வயல்வெளிகளில் பட்டி போடும் இடையர்களின் வாழ்க்கையை அத்தனை நுட்பமாக இதில் பதிவு செய்திருக்கிறார் ஆசிரியர். அவர்களின் அலைச்சலும் கிடைத்த இடத்தில் சமைத்து உண்டு ஆடுகளை மேய்ப்பதும், அதன் எண்ணிக்கையை உயர்த்தி அதன் மூலம் வருமானம் ஈட்டுவதும், வயல்களில் இரவு நேரத்தில் ஆடுகளை பட்டி போட்டு அந்த எருவுக்காக பணம் பெறுவதும் இவர்களின் இயல்பு.

கணவன் இறந்து விட்டால் அதே பெண்ணை அவனின் தம்பிக்கு கட்டிவைக்கும் முறையைக் கூறியிருக்கிறார். இது ஒரு வகையில் அப்பெண்ணின் நலனுக்காகவே என்றாலும் குடும்பம் உடையாமல் இருப்பதற்கானதாகவும் யோசித்திருக்கலாம். எப்படியோ பெண்ணின் வாழ்க்கைக்கான முன்னெடுப்பு என்பதே மகிழ்வானது.

இக்கதையில் கீதாரிகளின் வாழ்க்கை முறை, சடங்குகள், திருமண முறைகள் ஆடுகளின் வளர்ப்பும், அதன் சுழிகள் ,அதனால் ஏற்படும் நன்மைகள் என மிக துல்லியமாக பதிவு செய்திருக்கிறார்.




தாங்களே நாடோடிகள் மாதிரி திரிந்து அலைந்தாலும் மிகச் சுலபமாக இரண்டு பெண்குழந்தைகளை வளர்க்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் இந்த எளிய வாழ்க்கை யாளர்களின் மனிதத்தின் மாண்பை சொல்கிறது இந்நாவல். அன்பை ஆடுகளுக்கும் அநாதை குழந்தைகளுக்கும் சரிசமமாக பகிர்ந்துக் கொடுக்கிறார் ராமு கீதாரி.

ராமு என்கிற கீதாரியும் அவர் மனைவி இருளாயி, மகள் முத்தம்மா, வளர்ப்பு மகன் வெள்ளைச்சாமியும் ஓரிடத்தில் பட்டி போட்டு தங்கியிருக்கும் இடத்தில் ஒரு பைத்தியக்காரப் பெண் பிரசவ வலியுடன் இவர்களிடம் வந்து சேர்கிறாள்.

ராமுவின் மனைவியோ செய்வதறியாது திகைக்க ஆட்டுக்கு பிரசவம் பார்த்த அனுபவத்தில் பெண்ணுக்கு பிரசவம் பார்க்கும் ராமுவின் அந்த செயல் படிக்கும் பொழுதே நெகிழ்வைத் தருகிறது. இங்கே பைத்தியத்தை தன் இச்சைக்கு பயன்படுத்திக்கொண்ட அந்த ஈனப்பிறவியைப் பற்றிய எதுவும் பதிவு செய்யப் படவில்லை அது வாசகர்களின் அறிவுக்கு விட்டு விட்டார் போல. இரட்டைப் பெண் குழந்தைகள் பிறக்கிறது. ஊர் பெரியவர்களுக்கு தகவல் போகிறது. ராமுவின் மனைவிக்கு பயம் நாம் இருக்கும் நிலையில் இக்குழந்தைகளை ஊர் ஊராக தூக்கிட்டு சுத்த முடியுமா என்று.

## புத்தக மதிப்புரை

தொடர்ச்சி.......

இரண்டு மனைவிகளின் தொல்லை தாங்காமல் இருளாயியிடமே வளரட்டும் என சொல்லி பள்ளியில் சேர்க்கும் வயதில் அழைத்துப் போகிறார்.

வெள்ளைச்சாமிக்கு இந்த குழந்தைகளின் மேல் அத்தனை அன்பு.

இச்சிறுவனும் தாயின் பிறழ் உறவால் தந்தையால் தாய் தந்தையை இழந்து அடிமையாக வேலை செய்பவரிடமிருந்து ராமுவால் காப்பாற்றப்படவன். அண்ணன் தம்பி இருவரில் அண்ணனை ராமு கீதாரி தன் மைத்துனனிடம் விடுகிறார். இவனை தன்னுடன் வைத்துக் கொண்டு அவனுக்கான சம்பளமாக ஆட்டுக் குட்டிகளை ஒதுக்கி விடுகிறார். ராமுவும் அவனுக்கான ஆடுகளின் எண்ணிக்கையும் சேர்ந்தே வளர்கிறார்கள்.

ராமுவின் மகள் முத்தம்மாவின் கணவன் வெள்ளைச்சாமிக்காக இவர்கள் உழைப்பதாக எண்ணி தங்களுடன் வரச்சொல்ல வெள்ளைச்சாமிக்கு அவனுக்கான ஆடுகளையும் கூடவே கரிச்சாவையும் விட்டுச் செல்கிறார் ராமு. அவர் செல்லும் நேரம் ராமுவிற்கும் வெள்ளைச்சாமிக்கும் நடக்கும் பாசத்தின் உணர்வு போராட்டம் சிலிர்ப்பை தருகிறது.



கரையாங்காட்டு சாம்பசிவத்திடம் வளரும் தன் அக்கா சிவப்பியை அடிக்கடி போய் பார்த்துவருகிறாள் கரிச்சா.

அப்படி வருபவளுக்கு சிவப்பி பெரிய மனுசியாகிய கதை தெரிய சந்தோசமும் வருத்தமுமாக வெள்ளைச்சாமியிடம் சொல்லி சிவப்பிக்கு புது துணி வாங்கித்தருகிறாள். சிவப்பி சாம்பசிவத்தின் தவறான பார்வையை சொல்லி அழுகிறாள்.

அவர் அப்பா அவர் போய் அப்படி செய்வாரா என்கிறாள் கரிச்சா. இந்த இடத்தில் உறவுகளின் மீதான அத்தனை நம்பிக்கைளும் நொறுங்கி விடுகிறது.

சிலநாள் இடைவெளிகளிலேயே கரிச்சாவும் வயதுக்கு வந்துவிட அதை பட்டியில் வெள்ளைசாமியிடம் சொல்ல முடியாமல் இரவு முழுவதும் பெய்யும் மழையில் அந்த சிறுமி படும் அவஸ்தை நெஞ்சம் பதறச் செய்து விட்டது.

அவனிடம் ஏதும் சொல்லாமலே அக்காவை பார்த்து வருவதாகச் செல்லும் கரிச்சாவிற்கு பெரிய அதிர்ச்சி சிவப்பி தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டாள் என்பது. சாம்பசிவத்தின் காமத்திற்கு பலியாகிவிடுகிறாள் சிவப்பி. அதே ஓட்டத்தில் இருளாயியைத் தேடி போகிறாள்.

# புத்தக மதிப்புரை

**தொடர்ச்சி.......**

வயது பெண்ணிற்கு மணம் பேச வருகிறார்கள்.

கரிச்சாவிற்கு திருமணம் பேசும் தருவாயில் வெள்ளைச்சாமியுடன் இருந்தவளாயிற்றே அப்பொழுது என்னவெல்லாம் நடந்ததோ என்று பேசுபவர்களை விரட்டியடித்துவிட்டு வெள்ளைச்சாமிக்கே மணமுடிக்கிறார்.

இங்கு சற்று மனம் உறுத்துகிறது அது நாள் வரையில் சித்தப்பா என்றவனை திடீரென கணவனாக்கி விடுகிறாரே. இது வழக்கத்தில் உள்ளதா இந்த குழுக்களிடம். இல்லை வேறு வேறு ஆட்களின் உறவு என்பதால் சட்டென இந்த முடிவா?

இந்த மக்களையும் ஏய்க்கும் சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். பணம் குடுக்க முடியாது உங்கள் புழுக்கைகளை வாரி எடுத்துக்கொள்ளுங்கள் என்ற ஏளனத் திமிருக்கு இவர்களின் இயலாமையை நோவதைத் தவிர வேறு என்ன செய்து விட முடியும்.

மேய்ச்சலுக்காக இடம்பெயர்வது அதன் பொருட்டு அவர்கள் சந்திக்கும் இடர்கள், அரிசியை பாதுகாக்க அவர்கள் படும் துன்பம் திடீரென வெள்ளைச்சாமியின் அண்ணனை சந்திக்கும் சூழலும், அதன் பொருட்டு கரிச்சாவின் வாழ்வில் ஏற்படும் சிக்கல், கணவனை பிரிந்து ராமுவிடமே வந்து சேரும் கரிச்சா தான் கருவுற்று இருப்பதை அறிந்தும் அதை வெள்ளைச்சாமிக்கு தெரியபடுத்தாமல் தன் குழந்தையை தானே வளர்த்து ஆளாக்குவேன் என்று வைராக்கியமாக சொல்லும் கரிச்சா பாம்பு கடித்து இறந்து விடுகிறாள்.

இதோ வெள்ளைச்சாமி அடுத்த கீதாரியாக கரிச்சாவின் மகனையும் அவனுக்காக இன்னொரு ஆட்டு மந்தையையும் வளர்க்கப் போகிறார்.

ராமு கீதாரியும், கரிச்சாவும் நெஞ்சை விட்டு அகலாத பாத்திரங்கள்.


அன்பு மட்டுமே மனிதனின் உயிர் நாடி.

-சு. தமிழ்ச்செல்வி (வே.சுகந்தி) - வாணியம்பாடி -








**நூல்: "இயேசு காவியம்"**

**எழுத்து: கவிஞர் கண்ணதாசன்**

***"இறவாக் காவியம்***

***இதமாய்த் தந்தார்***

***இறைமகன் இயேசுவை***

***இனிதே வாழ்த்தினார்***

***இறைசாயலின் இடர்களை***

***இதயஞ் சுமக்க இனிய பாக்கள்***

***இகத்தில் படைத்தார்..."***

கவியரசர் கண்ணதாசனின் இறுதிப் படைப்பான இயேசு காவியம் நூலினை இத்தளத்தில் ஆய்வுக்குட்படுத்துவதில் பெருமைப்படுகிறேன். 398 பக்கங்களைக் கொண்ட இந்நூலானது எதிர்பாராதவிதமாக கண்ணதாசன் மறுமைக்குள் பிரவேசித்த பின்னரே வெளியாகியுள்ளது. அதனால் அவருக்கே நூல் அர்ப்பணமாகி உள்ளது. தமிழ் கூறு நல்லுலகின் நன்றிப் பெருக்கினை எடுத்தியம்புகிறது,

திருச்சிராப்பள்ளி ஆயர்கள் அந்தோனிடிவோட்டா, S.L கபிரியேல், தாமஸ் ஆகியோரின் ஆசியுரையுடன், பதிப்பாசிரியரின் உரை கரம் கோக்க கவியரசு கண்ணதாசன் அவர்களின் என்னுரை தொடர்கிறது.

என்னுரையிலே,

பேச்சுவாக்கிலே தொடங்கிய முயற்சி என்றும் இதனைப் படைப்பதற்காக உட்கார்ந்த போது பயம் தன்னைப் பீடித்துக் கொண்டதாகவும் இயேசுபிரான் அருள் பாலித்ததால் தொடர்ந்து பதினைந்து நாட்கள் எட்டுமணி நேரம் வேலை செய்து காவியத்தைப் படைத்ததாகவும், காத்திரமான பதிவு அவர் உள வெளிப்பாடாக வந்தமை மிக உன்னதமாயுள்ளது.

கலைக்காவேரி அறிஞர் J. P. ஸ்ரனிஸ்லாஸ் அவர்கள்

"உன் வாய்ச்சொல்லைக் கொண்டே உன்னை எடைபோடுவேன்" என்ற விவிலியத்தின்படி, கண்ணதாசன் வேறோர் கவிஞனுக்குப் பாடிய,

"செவ்விய தமிழில் சிந்து பயின்றவன்

ஒவ்வொரு சொல்லையும் உருக்கிப் படைத்தவன்

கவ்வி இழுத்திடும் கவிதையில் வல்லவன்

எவ்விதம் அன்னவன் ஏற்றம் இயம்புவேன்...."

என்ற வரிகள் இவருக்கே பொருந்தும் என்றுகூறி இக்காவியம் உருவான கதையைத் தந்துள்ளார்.அதன்படி இக்காவியத்தைப் பதினொரு அறிஞர்கள் பரிசீலித்துள்ளார்கள் என்று அறிய முடிகிறது,

கலைக்காவேரி நுண்கலைக்கல்லூரி முதல்வர் SM ஜோர்ஜ் அவர்கள் கவியரசு அவர்களுக்கு

வாழும்போது வாருவோர்க்கெல்லாம்

வார்த்தையாலே நன்றி சொல்வோம்..,

# புத்தக மதிப்புரை

**தொடர்ச்சி.......**

மௌனத்தாலே நன்றி சொல்வோம்...

என்ற அவரது வரிகளையே அவருக்குக் கண்ணீரோடு சமர்ப்பணம் செய்கிறார். அத்தோடு, இயேசுபெருமானின் மனித இறை வாழ்வினை காவியமாகத்தமிழ் மக்களுக்கு அறிமுகம் செய்து நுழைவாயிலிலேயே நின்று பெருமை கொள்கிறது கலைக்காவிரி,

பொருளடக்கத்தில் பிறப்புமுதல் நற்செய்தி ஆதாரக் குறிப்புகள்வரை ஐந்து பாகங்களாக தரப்பட்டுள்ளது.

உள்ளே மெதுவாகக் கதவைத் தட்டினேன்,

14சீர் விருத்ததில் பாயிரம் பாகாய் இனித்தது. கவியரசர் அல்லவா!

பாகம் ஒன்றில் (பிறப்பு)

ஆதியிலே வார்த்தை இருந்தார்...''ன்று தொடங்கி எருசலேம் யாத்திரையில் 16தலைப்புகளை பஸ்கா பண்டிகை வரை நிறைவு செய்கிறார்.

இரண்டாம் பாகம் (தயாரிப்பு)

மனந்திரும்புங்கள் என்ற தலைப்பில் தொடங்கி, மூன்று,தலைப்புகளாக தங்கம் புடமிடப்படுகிறது என்றதலைப்போடு நிறைவு செய்கிறார்,

மூன்றாம் பாகம் (பொதுவாழ்வு)

வாருங்கள் என் பின்னே,.,. என்று தொடங்கி 39தலைப்புகளில், ''புளிப்பு மாவு ஓர் எச்சரிக்கை'' யாக, ''சாவு மகிமையின் வாயில்...'' என்று நிறைவு செய்கிறார், இப்பாகத்தில் தான் மனுமகனாகப் பிறந்து இறைமகனாகச் செய்த அற்புதங்கள் கவிவரிகளில் குவிந்துள்ளன.

நான்காம் பாகம் (பாடுகள்), மிக முக்கியமான பகுதி.

நேரம் நெருங்குகிறது, பாடுகளின் பாதை, ஆகிய இரு தலைப்புகளில் யேசுவின் பாடுகளை, கண்ணீரைச் சிறப்பாகப் படைத்துள்ளார்.

''தங்கமகன் மலைமீது கொண்டுவந்து

போர்த்தி அதில், சிலுவை தூக்கி.,,

அங்கியினை உரிக்கையிலே உறைரத்தம் மறுபடியும் அழுததம்மா..,

பாய்ந்திருக்கும் ஆணியுடன் பொன்மேனி துடிதுடித்துப் பதைத்ததம்மா...'' என்று ''மேனியைத் துளைத்த கூரிய ஆணிகள்'' தலைப்பிலும்,

அம்மா அவருன் அன்பின் மைந்தன்,,,

அருளப்பா அவர் அன்னை உனக்கு.,,

மூன்று மணிக்கு மோகன மன்னன் ...

தோன்றிய தேதோ சொல்லை உயர்த்திச்...

சத்தம் இட்டார் தாரணி ஒடுங்க...

இறைவா, இறவைா என்னை ஏனோ கைவிட்டாயோ கைவிட்டாயோ.,,

தாகம் எனக்கெனச் சாற்றினார் இயேசு...

தந்தை எனக்குத் தந்ததோர் கடமை

இந்த உலகில் நான் ஏற்றதோர் கடமை...

எல்லாம் முடிந்தது...

# புத்தக மதிப்புரை

**தொடர்ச்சி.......**

என மனம் நிறைந்தார்...இவ்வாறு சிலுவை வார்த்தைகளை வரிகளாக்கியுள்ளார், இறுதியில் ''மங்களம், மகிமை ,ஆதாரக் குறிப்புகள்'' என்ற தலைப்புகளோடு நிறைவடைகிறது.

மொத்தம்,149 தலைப்புகளில் இயேசுவின் பிறப்பு, சிறுபராயம் ,இளமை, சோதனைகள், அற்புதங்கள், பஸ்கா, காட்டிக்கொடுப்பு, சிலுவைப்பாடு, ஏழு வார்த்தை, சிலுவை மரணம், உயிர்த்தெழல், விண்ணேற்றம் எல்லாமே உயிரோட்டமாக தேவமகிமையின் இரகசியமாகப் படைத்துள்ளார்,

ஐந்து மங்களப் பாடல் விருத்தப் பாவாக எதுகை மோனை கொஞ்சிவர

''எத்தனை உண்மை வந்து பிறந்தததது இயேசு பிறந்ததிலே,.,,

இத்தனை நாளும் மானிடன் வாழ்வது இயேசுவின் வார்த்தையிலே....'', என்று மானிட வாழ்வியலின் உண்மை நிலையை எடுத்துரைத்துள்ளார்.

பாடல்கள் மரபிலக்கண வழி நின்று எதுகை மோனை ஒட்டி உரச சந்தம் ஒலிக்க இசைக்கு ஏற்றவாறு ஆன்மீக காவியம் என்கிற பணிவோடு படைத்து எமக்காக விட்டுச் சென்றுள்ளார். உண்மையில் விவிலியத்தைப் படிக்க முடியாதவர்கள் கூட யேசு காவியத்தை இசை வடிவில் இலகுவாகப் படிக்க முடியும். அதுமட்டுமல்ல ஏராளமான மொழிகளில் உள்ள விவிலியம் இறவாக் காவியமாகப் படைக்கவும் இறைசக்தி வேண்டும் என்றே நான் கருதுகிறேன். அந்தவகையில் இறைதூதனோ கவியரசரும் என்றே எண்ணத்தோன்றுகிறது, இயேசுபிரான் எப்படி எளிமையாக வாழ்வியலைக் கடந்தாரோ அதேபோல் எளிமையாகவே இயேசுகாவியம் படைக்கப்பட்டுள்ளது.

கண்ணதாசன் கற்றது குறைவு-என்பர்.ஆனால், இக்காவியத்தை ஆழமாகப் படித்துப் பார்த்தால் அவருடைய மொழிப்புலமை, யாப்பிலக்கண அழகு எல்லாமே புரிந்து கொள்ளலாம்.

இறவாக் கவிஞனை என்றும் போற்றுவோம்.

மரணத்தை வென்ற மனுமகனை வணங்குவோம் .

மண்ணிடை இயேசு மறுபடி வருவார் என்பது சத்தியமே,..

விண்ணரசமையும் உலகம் முழுதும் இதுதான் தத்துவமே..,

ஆம் இயேசு காவியம் உலகின் தத்துவமே... என்று கூறி ஆய்வினை நிறைவுசெய்கிறேன்.

**- உடுவிலூர் கலா -**

**உங்கள் படைப்புகளுக்கான விமர்சனம் எமது சஞ்சிகையில் வெளி-வரவேண்டும் என விரும்புவோர் நீங்கள் வெளியிட்ட படைப்பின் இரண்டு பிரதிகளை எமக்கு அனுப்பி வையுங்கள். முன்னுரிமை அடிப்படையில் நூல்களுக்கான விமர்சனங்கள் வெளியிடப்படும். நூல்களை அனுப்ப எமது மின் அஞ்சல் முகவரியில் எம்முடன் தொடர்புகொள்ளுங்கள்.**

**நன்றி**



# கனடாவில் சூரிய கிரகணம்

- குரு அரவிந்தன் -

ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி சூரிய கிரகணத்தைப் பார்த்த போது அந்த ஒரு நிமிடத்தில் நடந்த நிகழ்வுகள் என்னைச் சிந்திக்க வைத்தன. இயற்கையின் வழமையான நிகழ்வுகளுக்குத் தினமும் பழகிப் போன எங்களுக்கு, இயற்கையின் திடீர் மாற்றங்கள் எப்பொழுதும் அதிர்ச்சி தரக்கூடியனவாகவே இருக்கின்றன என்பதை அன்று புரிந்து கொண்டேன்.




கனடா நாட்டிலே பனிக்காலத்தில் சூரியனைக் காண்பது என்பது அரிதாகவே இருக்கும். வெளியே வெய்யில் எறிப்பது போல இருந்தாலும், வெளியே சென்றால் சில சமயம் கடும் குளிராகவும் இருக்கும். காலநிலை காரணமாக இம்முறை கனடாவில் பனி கொட்டுவது மிகக் குறைவாகவே இருந்தது. வழமைபோல ஆய்வாளர்கள் பல காரணங்கள் சொன்னாலும், இந்த மாற்றத்திற்கு எல்நினோ (நுட ேமைெழ) என்ற பசுபிக்சமுத்திர நீரோட்டமும் இம்முறை ஒரு காரணமாக இருந்தது. சில வருடங்களுக்கு ஒரு முறை டிசெம்பர் மாதத்தில் எல்நினோவின் இதுபோன்ற பாதிப்பை எங்களால் இங்கே அவதானிக்க முடிகிறது.


ஏப்ரல் 8 ஆம் திகதி சூரிய கிரகணம் நடக்கப் போவதாகவும், வட அமெரிக்காவில் அதை முழுமையாகப் பார்க்க முடியும் என்றும் ஊடகங்கள் பல செய்திகளை வெளியிட்டிருந்தன. சூரிய கிரகணம் என்பது எப்போதாவது நடக்கும் ஒரு சிறப்பு வானியல் நிகழ்வாக இருக்கின்றது. சில சமயங்களில் சந்திரன், பூமி, சூரியன் ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் வரும்போது இத்தகைய நிலை ஏற்படுகின்றது. முக்கிமாக சூரியன் மற்றும் பூமிக்கு இடையே ஒரே நேர்கோட்டில் சந்திரன் வரும்போது சூரிய கிரகணமும், இவற்றுக்கு நடுவே ஒரே நேர்க் கோட்டில் பூமி வரும்போது சந்திர கிரகணமும் ஏற்படுகிறது.




அனேகமான கனடியர்கள் போலவே நாங்களும் இதற்கான ஆயத்தங்களைச் செய்திருந்தோம். சூரியனைப் பார்ப்பதற்கான விசேட கண்ணாடி, நிகழ்வைப் படம் பிடிப்பதற்கான கமெரா எல்லாம் தயாராக வைத்திருந்தோம். நாயாகரா நீர்வீழ்ச்சிப் பகுதிதான் இதற்குச் சிறந்த இடம் என்று ஊடகங்கள் தெரிவித்திருந்தன. பிள்ளைகளும் எங்களுடன் வந்ததால், நாங்களும் அங்குதான்

போவதாக இருந்தோம். அதே நேரம் கூட்டத்தைச் சமாளிக்க அனேகமான வீதிகளில் வண்டிப் போக்குவரத்தைத் தற்காலிகமாக மூடப்போவதாக நயாகரா பொலீஸார் அறிவித்திருந்தார்கள்.


பிள்ளைகள் பாடசாலையால் திரும்பி வீட்டுக்குப் போகும் நேரம்தான் இங்கே கிரகணம் நடக்கும் என்பதால், அவர்கள் அதற்கான கண்ணாடி இல்லாமல் நேரடியாகப




பார்த்து விடுவார்கள் என்ற பயம் காரணமாக முன் எச்சரிக்கையோடு அன்று பாடசாலைகளும் முடப்பட்டிருந்தன.

எதிர்பாராத விதமாக அன்று ரொறன்ரோ கருமேகத்தால் மூடப்பட்டிருந்தது. நயாகரா நீர்வீழ்ச்சிப் பகுதியிலும் முகிற் கூட்டங்கள் நிறைந்திருப்பதாகவும், தெளிவாகப் பார்க்க முடியாமல் போகலாம் என்ற குறுஞ்செய்தியும் வந்தது. எனவே நாங்கள் பயணத்தின் திசையை மாற்றியிருந்தோம். தெற்கு நோக்கிப் போகாமல் மேற்கு நோக்கிக் ஹமில்டன் என்ற பகுதிக்குச் சென்றோம். அங்கே வானம் தெளிவாக இருந்தது, ஆனால் ஒரு நிமிடமும் 50 விநாடிகளும்தான் இதைப் பார்க்க முடியும் என்பது தெரிய வந்தது. எனவே அங்கிருந்து இன்னும் சற்று தெற்கே உள்ள ஒரு கிராமத்திற்குச் சென்றோம், அங்கே ஏற்கனவே வீதி ஓரங்களில் வண்டிகளை விட்டுவிட்டு மக்கள் கண்ணாடிகளோடும், கமெராக்களோடும் நிறைந்திருந்தார்கள். அங்கு வானம் இன்னும் தெளிவாக இருந்ததால், சுமார் இரண்டு நிமிடங்கள் வரை முழுக் கிரகணத்தையும் பார்க்கக்கூடியதாக இருக்கும் என்று சொன்னார்கள்.

மாலை சுமார் 3:15 மணியளவில் சந்திரன் சூரியனை மறைக்கத் தொடங்கியது. முழுக்கிரகணம் வந்தபோது தெற்கே வானம் திடீரென அரேஞ்ச் நிறமாக மாறியிருந்தது. தெரு விளக்குகள் சட்டென்று எரியத் தொடங்கின. இருட்டினால் தானியங்கியாகவே எரியக்கூடிய தெருவிளக்குள் என்பதுதான் அதற்குக் காரணம். திகைப்படைந்த பறவைகள் எல்லாம் கூடு நோக்கிப் பறக்கத் தொடங்கியிருந்தன. அங்கிருந்த எல்லோரும் உணர்ச்சி வசப்பட்டுக் கண்ணாடியை எடுத்துவிட்டு, வெள்ளி மோதிரம் போலத் தெரிந்த சூரியனை நேரடியாகவே பார்த்தார்கள். அதைப் பார்த்ததும் எங்களுக்கே ஆச்சரியமாக இருந்தது, எங்கள் வாழ்நாளில் பூமியில் இருந்து சூரியனை வெறுங்கண்ணால் நேரடியாகப் பார்க்கலாம் என்று நினைத்தும் பார்த்திருக்க மாட்டோம். அப்படி ஒரு சந்தர்ப்பம் அன்று எங்களுக்குக் கிடைத்தது. தாமதிக்காது தேவையான புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டேன்.




வண்டியில் போகும் போது இதைப் பற்றி உரையாடிக் கொண்டு சென்றோம். அப்போது எங்களுடன் வந்த ஆறு வயதுடைய பெண் குழந்தை ஒன்று ‘சந்திரன் இரவில்தானே வரும், இன்று மட்டும் ஏன் பகலில் வந்தது’ என்று கேட்டாள். அறிவியல் சார்ந்த கேள்வி என்பதால், ‘சந்திரன் பகலிலும் வருகிறது, ஆனால் பகலில் சூரிய வெளிச்சத்தால் அது மறைக்கப்பட்டு விடுகின்றது’ என்று விளக்கம் கொடுத்தேன்.

1972 ஆம் ஆண்டு இதேபோல கிரகணம் நடந்தது, இனி 80 வருடங்களின்பின், அதாவது 2106 ஆம் ஆண்டுதான் இதே போன்ற முழுகிரகணத்தைப் பார்க்க முடியும். அடுத்த தலைமுறைக்குத்தான் இதுபோன்ற ஒரு சந்தர்ப்பம் இனிக் கிடைக்கப் போகிறது. அப்போது, நாங்களும் 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி கனடாவில் கிரகணத்தைப் பார்த்தோம் என்பதற்கு இந்தச் செய்திதான் ஆதாரமாக இருக்கப் போகின்றது.



**அ**வ்வப்போது வெவ்வேறுவிதமான மிகவும் அவசியமிக்க மற்றும் ஒவ்வொரு தமிழ்பேசும் மக்களும் அறிந்திருக்கவேண்டிய விடயங்கள் என நான் கருதுபவற்றை சுருக்கமான கட்டுரைகளாக தொகுத்துத் தந்துகொண்டிருப்பது எனது எழுத்தை ரசிக்கும் நீங்கள் அறியாதவிடயமே அல்ல. அதுபோலவே தான் இந்த ஆக்கத்திலும் நான் ஒரு முக்கியமான நபரைப்பற்றி மிகச் சுருக்கமாக தர முயற்சித்திருக்கிறேன்.



நான் படித்த ஆளுமை

# அதிகமான நாவல்களைப் படைத்த ஈழத்தின் தமிழ் எழுத்தாளினி

கலைத்துறைக்கு பங்களிப்புச் செய்த பல்வேறுவிதமான பல நபர்களைப்பற்றி நாங்கள் அறிந்திருக்கிறோம். எழுத்தாளர், நடிகர், கவிஞர், இசையமைப்பாளர், பாடகர் என்று இப்படியே கலைஞர் பட்டியல் நீண்டுகொண்டே போகும். ஒவ்வொரு கலைஞர்களும் ஒவ்வொரு விதமான கலைப்படைப்புகளை தமது ரசிகர்களுக்காக தந்துகொண்டே இருக்கிறார்கள். இதற்குள் அடங்கும் ஒரு பகுதியினர் கதைகளை எழுதி வாசகர்களுக்கு விருந்தாக படைக்கும் கலைஞர்கள். இவர்களுள் நாவல்களை எழுதுவோர் சிறுகதை எழுதுவோர் நாவல் மற்றும் சிறுகதை இரண்டும் எழுதுவோர் என பலர் இருக்கிறார்கள். இலங்கையில் அநேகமான மக்களால் அறியப்பட்ட குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கதை எழுதும் எழுத்தாளர்கள் இருக்கின்றனர்.

இவர்களுக்குள் ஒருவர் அதிலும் 12 நாவல்களை இதுவரை தனது வாசகர்களுக்காகத் தந்த ஒரு எழுத்தாயினி இருந்திருக்கிறார் என்றால் நம்ப முடிகிறதா? நம்பித்தான் ஆகவேண்டும் காரணம் அப்படி ஒருவர் இருந்திருக்கிறார். அப்படி ஒருவரை கிழக்கு மண் தந்திருக்கிறது திருமதி ந. பாலேஸ்வரி என்பவரே அவர். மார்கழி மாதம் 7ஆம் திகதி 1929ஆம் ஆண்டு திருகோணமலையில் முகாந்திரம் த. பாலசுப்பிரமணியம் மற்றும் பா. கமலாம்பிகை ஆகியோருக்கு மகளாகப் பிறந்தார். இவர் திரு கோணமலையின் மனையாவெளி கிராம சேவகர் பிரிவை வாழ்விடமாககொண்டிருந்தார். திருகோணமலை ஸ்ரீ சண்முகா வித்தியாலயத்தில் தனது ஆரம்பக் கல்வியை பயின்றார். பின்னர் சுண்ணாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி மற்றும் திருகோணமலை புனித மரியாள் கல்லூரி ஆகியவற்றில் தனது கல்வியைத் தொடர்ந்தார்.

பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து மட்டக்களப்பு ஆசிரியர் கல்விக் கல்லூரியில் பயின்று ஆசிரியையானர். ஆசிரியராக நீண்டகாலம் சேவையாற்றினார். இறுதியில் பிரதி அதிபராகவும் பணியாற்றினார். ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் திருமலை பெண்கள் நலன்புரிச் சங்கத்தின் ஒரு உறுப்பினராக செயற்பட்டார்.

இவர் ஈழத்தின் **அதிக நாவல்களை எழுதி வெளியிட்ட ஒரே பெண் எழுத்தாளராக** தனது எழுத்தாற்றல் மூலமாக பிரபலமான எழுத்தாளராக திகழ்ந்தார். சிறு வயதிலேயே வாசிக்கும் ஆற்றலால் உந்தப்பட்ட இவர் அதிகமான வாசிப்பில் ஈடுபட்டதன் மூலமாக எழுதும் ஆர்வத்துள் உந்தப்பட்டு அதனால் கவரப்பட்டு எழுத்தாளராக தன்னை உருவாக்கிக்கொண்டார். **பாப்பா, ராஜி** எனும் புனைப் பெயர்களிலும் தனது இயற் பெயரிலும் இவர் எழுதி வந்தார். பெண்மையின் தனித்துவத்தை தனது எழுத்துக்களில் புகுத்தி அதனை வாசகரிடத்தில் கொண்டுசேர்த்த ஒரே பெண் எழுத்தாளரும் இவர் தான் என அறியப்படுகிறது. தினகரன் பத்திரிகையில் இவர் தனது முதலாவது கதையை **“வாள்வளித்த தெய்வம்”** எனும் தலைப்பில் வெளியிட்டதன் மூலம் கலையுலகிற்குள் பிரவேசித்தார். அன்று ஆரம்பித்த பயணம் 200ற்கு மேற்பட்ட சிறுகதைகளையும் 30ற்கும் மேற்பட்ட கட்டுரைகளையும் 12 நாவல்களையும்

எழுதுமளவிற்கு தொடர்ந்தது. எழுத்தாளர் பாலேஸ்வரி அவர்களின் சிறுகதைகள் சில 2 தொகுதிகளாக **‘சுமை தாங்கி’** என்ற பெயரில் 1973இல் நரசு வெளியீடாக ஒன்றும் மற்றும் **‘தெய்வம் பேசுவதில்லை’** என்ற பெயரில் 2000ஆம் ஆண்டு இந்தியா காந்தளகம் வெளியீடாக மற்றொன்றும் வெளிவந்தன.

இவரது படைப்புகள் இலங்கையின் பிரபலமான பத்திரிகைகள் சஞ்சிகைகளாகிய வீரகேசரி, மித்திரன், ஈழநாடு, தினகரன், சிரித்திரன், ஒற்றைப் பனை, சுடர் மற்றும் ஜோதி ஆகிய வெளியீடுகளிலும் தமிழகத்தின் சில பிரபலமான பத்திரிகைகள் சஞ்சிகைகளாகிய தமிழ் மலர், கல்கி, குமுதம் மற்றும் கவிதை உறவு ஆகிய வெளியீடுகளிலும் அத்தோடு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வெளிவரும் உலகம் மற்றும் ஈழநாடு போன்ற சில வெளியீடுகளிலும் மலேசியாவின் தமிழ் மலர் எனும் வெளியீட்டிலும் வெளிவந்தன என்பது குறிப்பிடத்தக்கது. ந. பாலேஸ்வரி அவர்கள் மித்திரன் வாரமலரில் தொடர்ச்சியாக எழுதிவந்த ‘பூஜைக்கு வந்த மலர்’ எனும் தொடர்கதை நாவலாக 1971ஆம் ஆண்டு மாசி மாதத்தில் முதலாவது பதிப்பும் 1972 சித்திரை மாதத்தில் குறுகிய காலத்திற்குள் இரண்டாவது பதிப்பும் வெளிவந்ததோடு இதே நாவல் 1994ஆம் ஆண்டு மீண்டும் மித்திரனில் தொடர் கதையாக வெளிவந்ததும் முக்கியமான விடயமாகும்.

இலங்கை வானொலியின் பிரபலமான ஒரு நிகழ்சியாக இருந்த ‘இசையும் கதையும்’ நிகழ்விற்கு இவர் ஆரம்ப காலங்களில் ஆக்கங்களை எழுதி வந்திருக்கிறார். முன்பு வெளிவந்த ‘தினபதி’ பத்திரிகையில் சிறுகதை தெரிவுக்குழுவில் ஒரு உறுப்பினராக இருந்து பல இளம் எழுத்தாளர்களை வெளியுலகிற்கு கொண்டுவருவதில் ஊக்குனராகவும் செயற்பட்டுள்ளார். இவர் எழுத்தாளராக மட்டுமன்றி ஒரு சிறந்த பேச்சாளராகவும் இருந்தார் என்பது அனைவரும் அறிந்திருக்கக்கூடியதாக இருக்கவில்லை என்றுதான் கூறவேண்டும். இவரது நாவல்களில் தெரிவுசெய்யப்பட்ட சிலவற்றை திரைப்படமாக்குவதற்கான முயற்சிகளும் நடந்தேறியதாகவும் இறுதியில் கால ஓட்டத்தின் சூழ்நிலை மாற்றங்களால் அது கைகூடவில்லையெனவும் அறியக்கிடைக்கிறது. இவருடைய படைப்புக்களுள் ‘தத்தை விடு தூது’ எனும் நூல் திருகோணமலையைச் சேர்ந்த தி. த. சரவணமுத்துப்பிள்ளை என்பவரால் 1892இல் எழுதப்பட்ட ‘தத்தை விடு தூது’ எனும் சிற்றிலக்கியவகை செய்யுளை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டதாக கருதப்படுகிறது. சரவணமுத்துப்பிள்ளை அவர்கள் ஒரு புலவரும் ந. பாலேஸ்வரியின் நெருங்கிய உறவினருமாவார்.

இவர் பின்வரும் நான்கு விருதுகளையும் தன்னுடைய சாதனைகளின்பொருட்டு பெற்றிருந்தார். அவையாவன

- ‘தமிழ்மணி’ - இந்து சமய கலாசார அமைச்சு – 1992
- ‘சிறுகதை சிற்பி’ மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலை முத்தமிழ் மன்றம் - 1996
- ‘ஆளுனர் விருது’ – வடக்கு கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டு அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு - 1999
- ‘கலாபூசண விருது’ – அரச விருது – 2002
- தமிழியல் வித்தகர் பட்டம் - இது மட்டக்களப்பு அமிர்தகழியில் இயங்கிவரும் எழுத்தாளர் மையம் வழங்கும் விருது.

இவரது நாவல்களின் வெளியீடுகள் விபரம் வருமாறு:

- ‘சுடர்விளக்கு’ திருகோணமலை தமிழ் எழுத்தாளர் சங்க வெளியீடாக 1966ஆம் ஆண்டு வெளிவந்தது
- ‘பூஜைக்கு வந்த மலர்’ வீரகேசரி வெளியீடாக 1971இல். வெளிவந்தது
- ‘உறவுக்கப்பால்’ வீரகேசரி வெளியீடாக 1975இல் வெளிவந்தது
- ‘உள்ளக்கோயில்’ வீரகேசரி வெளியீடாக 1983இல் வெளிவந்தது
- ‘பிராயச்சித்தம்’ ரஜனி பப்ளிக்கேசன் வெளியீடாக 1984இல் வெளிவந்தது
- ‘உள்ளத்தினுள்ளே’ மட்டக்களப்பு செபஸ்ரியார் அச்சக வெளியீடாக 1990இல் வெளிவந்தது

‘கோவும் கோயிலும்’ நரசி வெளியீடாக 1990இல் வெளிவந்தது

‘தத்தைவிடு தூது’ மட்டக்களப்பு கத்தோலிக்க அச்சக வெளியீடு 1992ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது

‘மாது என்னை மன்னித்துவிடு’ ஸ்ரீபத்திரகாளி அம்மன் தேவஸ்தான வெளியீடாக 1993இல் வெளிவந்தது

‘எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு’ 1993இல் இந்திய காந்தளகம் வெளியீடாக வெளிவந்தது

‘அகிலா உனக்காக’ மகாராஜ் அச்சகம் இந்திய வெளியீடாக 1993இல் வந்தது

‘நினைவு நீங்காதது’ மணிமேகலை பிரசுரமாக 2003இல் வெளிவந்தது.

*இவருடைய கலைப்படைப்புகளில் சில தற்போது கிடைக்கக் கூடியதாக இல்லை ஆயினும் சில படைப்புகள் இன்னமும் கிடைக்கக்கூடியதாக இருக்கின்றன. சில ஆக்கங்கள் சூழ்நிலைகள் காரணமாக அழிந்துபோய்விட்டதாகவும் தெரியவருகிறது. இவருடைய படைப்புகளில் கிடைத்த பல முக்கியத்துவம் வாய்ந்த பதிவுகள் பல்கலைக்கழக மாணவர்களிடத்து இவரது எழுத்துக்கள் சார்பான ஆவலை தூண்டியது. இதன் காரணமாக இவரது எழுத்துருவாக்கங்களை மையப்படுத்தியதான ஆய்வுக் கட்டுரைகள் நான்கு பல்கலைக்கழக மாணவர்களால் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இத்துணை சிறந்த எழுத்தாளராக விளங்கிய ந. பாலேஸ்வரி அவர்கள் 27ஆம் திகதி மாசி மாதம் 2014ஆம் ஆண்டு கலைத்துறைப்பயணத்தையும் உலக வாழ்க்கைப் பயணத்தையும் முடித்துக்கொண்டு இறையடி சேர்ந்தார்.*


## விசேட திறன்மிக்க வளவாளர்களால் வழங்கப்படும் பயிற்சி நெறிகளில் கலந்துகொள்ள ஆர்வமுள்ளவரா நீங்கள்

| | |
|---|---|
| தலைமைத்துவம் | Leadership |
| முகாமைத்துவம் | Management |
| சந்தைப்படுத்தல் முகாமைத்துவம் | Marketing management |
| தொழில் முயாற்சியாண்மை | Entrepreneurship |
| நிறுவன முகாமைத்துவம் | Organizational Management |
| திட்டச் சக்கர முகாமை | Project Cycle Management |
| வியாபாரத்திட்ட தயாரிப்பு | Business Plan Development |
| தர்க்கச் சட்ட வரைபு | Logical Framework Development |
| கண்காணிப்பும் மீளாய்வும் | Monitoring and Evaluation |
| பங்கேற்பு கிராமிய கணிப்பீடு மற்றும் தேவை இனம்காணல் | Participatory Rural Appraisal and Need Assessment |
| வசதிபபடுத்துதல் மற்றும் முன்வைப்புத்திறன் | Facilitation and Presentation Skills |
| பயிற்றுவிப்பாளர் பயிற்சி | Training of Trainers |
| வியாபார ஆலோசனை | Business Counseling |

**தொடர்புகொள்ளுங்கள்: விழுகம் அபிவிருத்தி ஆலோசனைகள்**

**(Viuham Development Consultancies) 0771682536**



## ஒரு பக்க சிறுகதை

ஏழைஎளிய.

பொதுமக்கள் அதிகம் பேர் பயனுறும் வகையிலான மருத்துவ முகாம் அது

சொந்த மாவட்டமோ மாநிலமோ அல்ல வேற்று மாநிலம்

தவிர்க்க இயலாத ரயில் பயணம்

அதுவும் குறைந்த பட்சம் இருவாரங்களுக்கு முன்பே ரயில் நிலையம் சென்று முன்பதிவு செய்ய வேண்டும் அப்போதுதான் பயணச்சீட்டையும பயணத்தையும் உறுதி செய்ய முடியும்

ஒருமணி நேரம் முன்னதாகவே நிலையம் செல்ல வேண்டும் ..

இரவுபத்துமணிக்கு மேல் வண்டிபிடித்து மருத்துவ

உபகரணங்கள் செவிலியர்கள் .

பிற பணியாளர்களை அழைத்தச்செல்ல வேண்டும்

மருத்துவர் மட்டும் காரில் பயணிப்பதால் அவர்கள் தொல்லை இல்லை

ரயில் நிலையம் எதிர்பார்த்த வண்டி

ஆனால் நாங்கள் முன்பதிவு செய்த இருக்கைகள்

# முயற்சி முட்டாளாய்ப் போனது...

அதற்கான ஆயுத்தங்களை தான் விஜய் செய்து கொண்டிருந்தான்

இந்த முகாமினால் மருத்துவமனைக்கும் நற் பெயர் கிடைக்கும் என்பதால் நிர்வாகமும் தேவையான ஒத்துழைப்பு தந்தது

சுமார் 300 பயனாளிகள்

பங்கு பெறும் முகாமில் அவர்களை பரிசோதி"க்க என்னவெல்லாம் தேவை.

அவர்களுக்கு எப்படி கவுன்சிலிங் தருவது என பெரிய பயிற்சியே நடந்தது

ஒருதினம் முன்பாகவே சென்றால் தான் சேருமிடம் சென்று சேரமுடியும்

காலை 7மணிக்குள் எழுந்து கிளம்பினால் தான் .முகாம் நடக்கும் இடம் சென்று அடைய முடியும்..

ஒருவழியாக அரிமாசங்கமும் மக்கள் மன்றமும் மருத்துவமனையும் இணைந்து நடத்திய முகாம் நல்லபடிமுடிந்தது

வந்த பயனாளிகள் அனைவரும் மன நிறைவுடன் சென்றனர்

மதிய உணவிற்குப்பிறகு சிறிது.ஓய்வு

இரவு சரியாக 12.05 மணிக்கு புகையூர்தி வருகை

மட்டும் எங்களுக்கானதாக இல்லை ஏன் ..?

பயணச் சீட்டுபரிசோதகர் சார் உங்களிடம் உள்ளது நேற்றைய பயணசீட்டு. நள்ளிரவு.12 மணிக்கு மேலான பயணம் தேதி மாற்றமாகி மறுநாள் என ஆகிவிடும்

இதனை நீங்கள் கவனிக்கவில்லை

உங்கள் பயணச்சீட்டு காலாவதியாகிவிட்டது

உங்கள் முயற்சி சரியானதாக இருக்கலாம்.

மணி நள்ளிரவு. 12 ஐ தாண்டும் போது மறுநாள் தேதியை நீங்கள் குறிப்பிட மறந்தமை.தான் முட்டாள் தனமானது

மருத்துவம்...இலவசச் சேவை என்பதால்

இதே வண்டியில் நீங்கள் வேறு டிக்கட் எடுத்து பயணிக்கலாம்

என்னால் இயன்றவரை உதவுகிறேன்

எனக்கூறிய போதுதான்

புத்திசாலித்தனம் என நினைத்தது முட்டாள்தனமானதை விஜய் உணர்ந்தான்

சிறு கவனக்குறைவுதான் ஆனால் ..... எத்தனை இடயூறுகள் ..

முற்றும்

**ந இரவிச்சந்திரன், பழனி,** தமிழ்நாடு

# சிறுகதை

# க்ரைம் சீன்

**— லதாசரவணன் —**



**வா**சற்கதவிடம் இருந்து அந்நியப்பட்டு போயிருந்தது அந்த அறை. கவர்ச்சி நடிகையின் நடன உடையைப் போல சிறு சிறு ஆனால் நீளமான மஞ்சள் நிற க்ரைம் சீன் ரிப்பனைச் சுற்றியிருந்தது கலைந்திருந்த அவ்வறையின் சில பகுதிகள் !

அறையின் இதய மூலையில், உடல் ஒன்றில் இருந்து சுமார் 180 நிமிடங்களுக்கு மேலான ரத்தம் சற்றே கெட்டித்துப் போயிருக்க, ரத்தத் தீற்றல்கள் தரையில் ஒப்பனை செய்திருந்தன.




500 ரூபாய்க்கு வாங்கிய பெல்ஜியம் கார்பெட் ... “ஈ” என்று பல்லிளித்து தன் உண்மைத் தன்மையை நிரூபித்தது. தரைவிரிப்பின் சில முனைகள், கூர் கத்தியால் அரைகுறையாக சவரம் செய்யப்பட்டதைப் போல நூல்கள் வெளிவந்து ஒழுங்கற்று இருந்தது.

துகிலுரியப்பட்ட அந்த க்ரைம் சீனின் இறுதி உருண்டைகள் நூற்கண்டைகள் போல உருண்டிருந்தது. எஞ்சியிருந்த பானங்களில் பில்லும், டிப்ஸூம் தராமல் சுதந்திரமாய் வந்து உறிஞ்சிவிட்டு போன ஈக்கள்.

அடுப்பின் அருகே சமைத்த பொருட்களின் வாச எச்சம். அந்த அறை அலங்கரிக்கப்பட்ட பெண்ணைப் போல தலைகவிழ்ந்த விளக்குகளின் மங்கிய வெளிச்சத்தில் “வா...!” என்று ஒரு அழைப்பு விடுத்திருந்தது. சற்று நேரத்திற்கு முன்பு.

ஆனால், இப்போதோ கனமான போர்வைக்குள் அடங்கிய இரு உடலைப் போல நிசப்தமாய் ஒரு வித அமானுஷ்யமாய்...!

மேஜை விரிப்புகள்....ரத்த வாசனைகளில் மூக்கைப் பொற்றிக் கொள்ள முடியாமல் தவித்தது. கொன்றவனும், கொல்லப்பட்டவனும் அருகருகே, இருவருக்கும் பெரிதாய் வித்தியாசம் இல்லை அவன் உடலால் மரித்திருந்தான். இவன் உணர்வுகளால் மரித்திருந்தான். நியான் போர்டின் வெளிச்சத்தில், கலவர முகங்களும், உச்சுக் கொட்டல்களும் தெரிந்தன.

“நான்தான் பார்த்தேனே ! பழம் நறுக்கிற கத்தியை எடுத்து சதக் சதக்குன்னு !”

அவரவரின் கற்பனைக் குதிரைகளில், சுமார் நூறு முறைக்கும் மேல் அவன் குத்தப்பட்டு இறந்து கொண்டே இருந்தான். அகற்றப்பட்ட உடல் வெறும் சாக்பீஸ் கோடுகளில் மிச்சம் இருந்தது. க்ரைம் சீன் ருசுவிற்காக வெள்ளைப் பவுடர் திட்டுகள். பிளாஷில் சுருட்டிக் கொண்ட கேமிராக்கள். ‘உனக்கு ஏதாவது தெரியுமா ? அதட்டல் கேள்விக்கு இல்லைங்க ?’என்று உதட்டுப் பிதுக்கல் பதில்கள்.

“யார்ரா...செத்தது ? பாக்கெட்டில் ஐடி கார்ட்லே ராவ்ன்னு பேரு போட்டு இருக்கு !”

“ம்...!”பிரக்ஞையற்று அமர்ந்திருந்தவனின் கண்களில், மிரட்சி... கரங்களில் விலங்கு !

காதோரம் சொருகிய பால் பாயிண்ட் பேனாவை இரண்டு முறை உதறிவிட்டு, முன்விரோதம் காரணமாக

## சிறுகதை
# கிரைம் சீன் தொடர்ச்சி.......

கொலை என்று எழுதி பெயர்களுக்கும் நேரங்களுக்கும் இடையில் அடிக்கோடிட்டு கொண்டார் அந்த காக்கிச்சட்டை.

“401 முடிந்ததா ?”

“எஸ் ஸார் ? அவனை ஜீப்பிலே ஏத்துங்க ?” அவன் அமைதியாய் ஏறினான் ! இன்னும் பத்து நாளைக்கு அவன் முகமும் இந்த உணவகத்தின சிதைந்த உடலும் பிரபலம் ஆகும்.

“பெரிதாக என்ன செய்துவிடப் போகிறார்கள் என்னை ?” என்ற கேள்வி மேலோங்கியது.

“இவன் இறக்கப்பட வேண்டியவன்தான் என்றால் இவர்கள் ஒப்புக்கொள்வார்களா ?” இக்காட்சி ஒன்றும் எனக்குப் புதியது இல்லை, இதே போல்தான் என் சாதனா இவனால் கொலை செய்யப்பட்டாள் என்றால், என்ன செய்வார்கள் ? எங்கே ? எப்போது ?” கேள்விகளை முழ நீளத்திற்கு நீட்டுவார்கள்.


‘அக்கறையான நண்பனாய் பழகி என் அன்பு காதலியை உடல் இச்சைக்காக கொன்றவன், அதற்கு பழிதான் இது என்றால் ?’

கம்பிகளுக்கப் பின்னால், அடைக்கப்பட்ட பின் அவரவர் வேலையைப் பார்க்கச் சென்று விட்டார்கள். என் காதல் கதையின் நினைவுகளில் சுழல நேரம் கிடைத்தது.

அவள் .... சட்டையில் பத்து ரூபாய் இல்லாத போது உணவிட்ட அன்னபூரணி. மெலிதாய் காதலையும், மோகத்தையும் என்னுள் படர விட்டவள்.

மொட்டை மாடியின் ஒற்றை அறையினைப் பகிர்ந்து கொள்ள வந்தவன். எங்கள் அன்பையும் அவளின் உடலையும், விழி பிதுங்கி செய்வதறியாது அக்காமுகனால் சூறையாடப்பட்டதை, நான்கே வரிகளில் கடிதமாக்கி இறந்த என் சாதனா.

“நல்ல பொண்ணுப்பா” என்று எல்லாராலும் அனுதாபப்பட்ட சாதனா. “உணவகம் ஆரம்பிக்கிறேன் லோன் கிடைச்சாச்சு, ஒரே மாதத்தில் கல்யாணம்” என்றதும், கன்னத்தில் தன் உதடுகளால் எச்சில்படுத்திய சாதனா.



அவளை எரித்துச் சாம்பலின் வடிவாய் கரைந்த பின்னும், கரையாத உண்மையைத் தேடிய என் கண்ணில் இன்று அவன் பட்டான், நடந்ததை நான் அறியவில்லை என்ற நம்பிக்கையில், என்னை தேற்றி பின் விடைபெற்றவனை நிறுத்தி, தவறுக்கு தண்டனை தந்து விட்டேன்.

“ என்ன சொல்றான் ?” ராத்திரிக்கு பரோட்டா ஆர்டர் செய்துவிட்டு, கையை முறுக்கியபடி கேட்டார் அந்த இன்ஸ்பெக்டர்.

“முன்விரோதமுன்னு சொல்றான் ஸார். FIR போட்டாச்சு, கையெழுத்தும் வாங்கிட்டேன்.” அவர் பார்ச்சலைப் பிரித்தார். பாயாவும், பரோட்டாவும் கலவி கொண்டது அவர் வயிற்றில்.

“ப்பா.. இந்த படம் நிறைய வன்முறை, அத்தோடு ரொம்ப....”

“ரொம்ப.....”

“போடா தெரிஞ்சுகிட்டே கேட்பியே ?” விலாவில்

குத்தினாள். தாராளமாய் முதுகில் படர்ந்து பயணத்திற்கு தயார் என்று அறிவித்தாள். “ஏன் ரீ ஒருவேளை இந்த படத்திலே வர்ற ஹீரோயின் மாதிரி எனக்கும் ஏதாவது ஆயிடுச்சின்னா... ? நீ என்ன பண்ணுவே ?” என்று கேட்டு, பதற வைத்தாள்.

“ஏண்டி இப்படியெல்லாம் பேசற ?”

“சும்மா சொல்லேன் நெருப்புன்னா வாய் சுட்டுடவா போகுது ? பழையபட கதாநாயகன் மாதிரி பழிவாங்குவியா ? இல்லை சனியன் தொலைஞ்சதுன்னு தலைமுழுகிட்டு....?!”

“விளையாட்டுக்கு கூட இப்படி பேசாதே சாதனா. உன் உயிர் பிரிந்த அடுத்த விநாடி நானும் இறந்திடுவேன்” என்றேன் நான்.

“லவ் டயலாக் விடாதே...வண்டியை பார்த்து ஓட்டு ?” என்றாள். இன்னும் அதிகமாய் படர்ந்தபடி, பாவி ‘எந்தநேரத்தில் அப்படி சொன்னாளோ...?அதே கோலத்தில் அவளைப் பார்ப்பேன் என்று நினைக்கவில்லை’. ‘என்ன செய்யப்போறே ? என்று அந்த சலனமற்ற விழிகள் என்னைக் கேட்டதே.....?!’

அன்றிலிருந்துதான் அவனைத் தேடினேன். கிடைத்தான். முடித்தேன். இப்போது....?1”

“லாக்கப்பை தொறங்க அவனை விசாரிக்கணும்”. இன்ஸ்பெக்டர் ஏப்பம் ஒன்றை விட்டு சிகரெட் நெடியை நெஞ்சுக்கூட்டில் படர விட்டார்.

“ரி….. எத்தனை நேரம் காத்திருப்பது ?” என்ற சாதனாவின் குரல் காதோரம் மோதியது.

“இதோ….” பேண்ட் பேக்கட்டில் அதுவரையில், மறைத்து வைத்திருந்த சிறு பட்டன் கத்தியை எடுத்து, என் இடக்கையின் மணிகட்டில் அவள் பெயர் எழுதியிருந்த இடத்தில் மெல்லிய கோடிழுத்தேன். ரத்தம் தரையில் புது டிசைன் கோலம் இட்டது.

“சார் இங்கே வந்து பாருங்களேன்”. ‘அவர் வருவதற்குள் நான் ....!”

என் கண்கள் அறையின் ஓரம் கிடந்த கிரைம் சீன் ரோலின் மேல் படிந்தது. நான் இறக்கிறேன்.

**- லதாசரவணன் -**

### குறுக்கெழுத்துப் போட்டி – 1

**இடமிருந்து வலம்**

1 …………….என்பது சில காலம் வாழ்வது திரைப்படப் பாடல் ஒன்று (5 எழுத்துகள்)

5 மீன் பிடிக்க உதவுவது(2 எழுத்துகள்)

**வலமிருந்து இடம்**

6 காற்று என்பதன் வேறு சொல் (2 எழுத்துகள்)

9 இவள் வந்தாள் பொருள் கோடி தந்தாள்(5 எழுத்துகள்)

**மேலிருந்து கீழ்**

2 பெரியவளின் எதிர்ப்பதம் (5 எழுத்துகள் )

3 எதற்கும் ஒரு எல்லை உண்டு வேறு ஒரு சொல் (4 எழுத்துகள்)

**கீழிருந்து மேல்**

4 பெண்களின் விழிகளை இந்த மீனுக்கு ஒப்பாக சொல்வார்கள்(3 எழுத்துகள்)

7 வேதம் என்பதன் வேறு சொல்(2 எழுத்துகள்)

8 மண்பாண்டங்கள் செய்ய பயன்படும் மண்(4 எழுத்துகள்)

10 பொன்னிறத்தில் பறக்கும் ஒரு பூச்சியினம் (5 ஐந்து எழுத்துகள்)

| | | | | |
|---|---|---|---|---|
| 1 2 | | 3 | | |
| | | | | |
| | 4 | | | |
| 5 | | | 8 | |
| | | 7 | | 10 9 |

போட்டியில் யாரும் பங்குபற்றலாம் பங்குபற்றுவோர் விடைகளை நிரப்பி அதனை எமது மின் அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள். வெற்றி பெறுவோர்க்கு மின் சான்றிதழ் அனுப்பி வைக்கப்படும்

# நனைவிடை தோய்தல் ~ முருகபூபதி





எனக்கு தற்போது 73 வயதாகிறது. எனக்கு 18 வயதாகவிருக்கும்போது பாட்டி (எனது அம்மாவின் அம்மா) தையலம்மா, தனது 95 வயதில் மறைந்தார். கையெழுத்தும் வைக்கத்தெரியாத இந்தப் பாட்டிதான் எனது ஆதர்சம். பாட்டி எனது பால்யகாலத்தில் எனக்கு சொல்லித்தந்த கதைகளையே பின்னாளில் நான் எழுத்தாளனாகியதும் பாட்டி சொன்ன கதைகள் என்ற தலைப்பில் ஊடகங்களில் எழுதி, புத்தகமாகவும் வெளியிட்டேன். இதுவரையில் இரண்டு பதிப்புகள் கண்டுவிட்டன.

ஆனால், இக்காட்சிகளை காண்பதற்கு பாட்டிதான் இல்லை. நான் கடந்த 36 வருடங்களாக அவுஸ்திரேலியாவில் வசிக்கின்றேன். எனக்கும் இப்போது ஆறு பேரக்குழந்தைகள். அவர்கள் அனைவரும் அவுஸ்திரேலியாவில் பிறந்தவர்கள். இங்கு அவர்கள் சிறுவர் இலக்கியங்களை ஐபோர்டிலும் புத்தகங்களிலும் தெரிந்துகொள்கிறார்கள்.



இங்கு மழைக்காலம் வரும்போதெல்லாம் எனது பாட்டி, எனக்கு அன்று சொன்ன கதைகளும் நினைவுக்கு வரும். அவற்றை நினைப்பதே சுகமான அனுபவம்தான்.

இலங்கையில், எங்கள் நீர்கொழும்பூரில் எனக்கு ஐந்து வயதாகவிருக்கும்போது ஒரு மழைக்காலத்தில் எனது பாட்டி சொன்ன கதையையும், அத்தோடு எழுந்த சிந்தனைகளையும் இங்கு சொல்கின்றேன்.

மழை பெய்தது. மின்னலும் வெட்டியது. எனக்கு எதுவும் தெரியாது. பாட்டிக்கு அருகில் ஆழ்ந்த உறக்கம். இரவு உறங்கும் வேளையில் பாட்டி சொன்ன விக்கிரமாதித்தன் கதை கனவில் வந்தது.

விக்கிரமாதித்தன் குதிரையிலிருந்து என்னுடன் பேசிக்கொண்டிருந்தான். என்னையும் அதில் ஏறுமாறு அழைத்தான். ஏறமுயற்சிக்கின்றேன். முடியவில்லை. அவன் கையை நீட்டி, "என்னைப்பிடி.... ஏறு... ஏறு... மழை வருகிறது" என்றான். நானும் அவன் கையைப் பற்ற எத்தனிக்கின்றேன்.

மின்னல் வெட்டுகிறது. கண்களை இறுக மூடிக்கொண்டேன். பெருத்த ஓசையுடன் இடி முழங்கியது. "ஐயோ..." என்று அலறியவாறு விக்கிரமாதித்தன் பற்றியிருந்த எனது கையை விடுவித்துக்கொண்டு தரையில் விழுந்து கத்துகின்றேன்.

பாட்டி, "அர்ச்சுனா... அர்ச்சுனா..." என்று சொல்லிக்கொண்டு என்னை அணைக்கிறா. கண்விழித்துப்பார்க்கிறேன். பாட்டி எனது தலையைத் தடவி, "என்ன பயந்துவிட்டாயா...?" எனக்கேட்கிறா.

"விக்கிரமாதித்தன், குதிரை, மின்னல், இடி, மழை..." என்று பிதற்றுகின்றேன்.

"கனவு கண்டாயா....?" பாட்டி எழுந்து சென்று சுவாமிபடத்திற்கு முன்னால் இருந்த தட்டத்திலிருந்து எடுத்துவந்த திருநீற்றை எனது நெற்றியில் பூசிவிட்டு தொடர்ந்தும் "அர்ச்சுனா... அர்ச்சுனா..." என்று சொல்கிறார்.

தொடர்ந்தும் வானத்தில் இடி முழங்குகிறது. மழை சோவென்று பொழிகிறது. நான் படுத்திருக்கும் பாயின் அருகிலும் கூரையிலிருந்து ஒழுகும் மழைநீர் தவழ்ந்து வருகிறது. பாய் நனைகிறது.

பாட்டி மீண்டும் எழுந்து சென்று ஒரு அலுமினியப்பாத்திரம் எடுத்துவந்து கூரையால் சொட்டும் நீருக்கு வைக்கிறா.

வீட்டில் இருப்பது மூன்று அறைகள். எங்கும் ஒழுக்கு. அம்மாவும் எழுந்துவிட்டா. பாட்டியும் அம்மாவும் ஒழுக்கிற்காக பாத்திரங்கள் தேடுகின்றனர். அக்காவும் தங்கை தம்பியும் என்னருகில் வந்து படுத்துவிட்டனர். அம்மாவும் பாட்டியும் எம்மைச்சுற்றி மழை நீர் வராதவாறு ஒழுக்குகளுக்கு பாத்திரங்களை வைக்கின்றனர்.

"டக்... டக்..." என்று மழை ஒழுக்கு துளித்துளியாக விழுந்து ஓசை எழுப்புகிறது.

எனக்கு இப்போது விக்கிரமாதித்தன் மறைந்துவிட்டான் . பாட்டி சொன்ன அர்ச்சுனன்தான் நினைவுக்கு வந்தான்.

பாடசாலையில் வகுப்பு ஆசிரியர் சொன்ன மகாபாரதக் கதையில் வரும் அர்ச்சுனனை இந்த மழைவேளையில் பாட்டி ஏன் கூப்பிட்டா...?

பாட்டியிடம் கேட்டேன்.

"வானத்தில் வீமனும் துரியோதனனும் கடுமையாக மோதிக்கொள்கிறார்கள். இடையில் நுழைகிறான் அர்ச்சுனன். இவன் வில் வீரன். அவர்கள் இருவரும் கஜத்தினால் மோதுகிறார்கள். இடையில் நுழையும் இவன் கஜங்களினால் தாக்கப்பட்டுவிட்டால், பிறகு பாரதப்போரில் பாண்டவர்களுக்கு தோல்விதான் கிட்டும். அதனால், அர்ச்சுனா... அர்ச்சுனா... என்று அழைத்து அவனை காப்பாற்ற முயற்சித்தேன்" என்று பாட்டி எனக்கு கதை சொன்னார்கள்.

எனது பால்ய காலத்தில் ஐந்து வயதாக இருக்கும்போது ஒரு மழைநாளில் பாட்டி சொன்ன கதைதான் இது.

அன்று அதை நான் நம்பினேன். அந்தக்கதையை எனது குழந்தைகளுக்கோ எனது பேரக்குழந்தைகளுக்கோ நான் சொல்லவில்லை. மழை பெய்தால் மின்னலும் வரும் அதனைத்தொடர்ந்து இடியும் முழங்கும் என்பது தற்காலக்குழந்தைகளுக்குத் தெரிந்த விஞ்ஞானம்.

நவக்கிரகங்களை வணக்கினோம். தற்போது மேலும் சில கிரகங்களை நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துவிட்டனர். செவ்வாய்தோசம் என்றோம். செவ்வாய்க் கிரகத்திலும் தண்ணீர் இருக்கலாம் என்ற ஆராய்ச்சி நடக்கிறது.

திருஞானசம்பந்தருக்கு வானுலகிலிருந்து வந்த உமாதேவியார் ஞானப்பால் கொடுத்த கதையை பாட்டி சொல்ல அறிந்திருக்கின்றேன். அதே கதையை எனது மகன் நான்கு வயதாக இருக்கும்பொழுது சொன்னபோது "அந்த உமாதேவியார், சோமாலியாவுக்கும் எதியோப்பியாவுக்கும் சென்று அங்குள்ள குழந்தைகளுக்கு பால் கொடுக்கமாட்டாவா...?" எனக்கேட்டான்.

அதனால் அத்தகைய கதைகளை எனது பேரக்குழந்தைகளுக்கு நான் சொல்வதில்லை.

மழையையும் நிலவையும் காண்பித்து எனது குழந்தைகளுக்கு சோறூட்டியது போன்று, எனது பேரக் குழந்தைகளுக்கு வீட்டாபிக்சும், பாஸ்டாவும், நூடில்சும் கொடுக்கமுடியாது.

அவர்கள் முன்னால் ஐபோர்டில் பெப்பி பிக் பல கதைகளைச் சொல்கின்றது.

மழைக்காலத்தில் எனக்கும் பாட்டிக்கும் இடையே நீடித்த நெருக்கம், இன்றைய பாட்டிமாருக்கும் பேரக்குழந்தைகளுக்கும் இடையே இல்லை.

மழைக்காலத்தை வெள்ள அநர்த்தம் வராதவரைக்கும் ரசிக்கலாம். வீட்டு முற்றத்தில் மழைவெள்ளம் வந்தால் காகிதக்கப்பல் விட்டு பரவசமடைந்த காலத்தை மறக்கத்தான் முடியுமா...? கிணற்றின் விளிம்பு வரையில் தண்ணீர் பெருகினால் அதனருகே விடமாட்டார்கள். மாரிகாலத்தவளையின் அவலக்குரலும் அந்த இரவிலும் எமக்கு தாலாட்டுப்பாடல்தான். மின்விளக்கை சுற்றிவந்து செத்துவிழும் ஈசல்களை கூட்டிப்பெருக்கும்போது அவற்றின் அற்பாயுள் கவலை தரும்.

கடும்மழைபெய்தால் பாடசாலைக்கு கட் அடிக்கலாம் என்ற நப்பாசையும், வீட்டுக்கணக்கு செய்யாமல் தப்பிக்கலாம் என்ற பேராசையும் வரலாம்.

மழை விட்டால் பாடசாலைக்குப்போகத்தானே வேண்டும் என்ற யோசனை வரும்போது, "மழையே வா... வெய்யிலே போ..." என்று பாடத்தோன்றும்.

மழை பகலில் வந்தால் நல்லதா...? இரவில் வந்தால் நல்லதா...? என்று வீட்டில் பட்டிமன்றம் நடக்கும்போது பாட்டிதான் நடுவர்.

"பகலில் வந்தால் பாடசாலைக்கு கட் அடிக்கலாம்" என்பேன் நான்.

"இரவில் வந்தால், நன்றாகத்தூக்கம் வரும்" என்பாள் அக்கா.

"பகலில் வந்தால் முற்றத்தில் கப்பல் விடலாம்" என்பான் தம்பி.

"இரவில் வந்தால், பாட்டி கதை சொல்வா" என்பாள் தங்கை.

"மழை வந்தால் வீட்டில் ஒழுக்கும் வரும்" என்பார் அம்மா.

"மழை வந்தால் வெளியே வியாபாரத்திற்கு செல்ல முடியாது" என்பார் அப்பா.

"மழை வந்தால் பயிர்கள் வளரும் செழிக்கும் - மழைவந்தால் எல்லோருக்கும் நன்மை" என்று பாட்டி தீர்ப்புச்சொல்வார்.

இளமைக்காலத்தில் மழையை ரசிக்கவும், விவாதிக்கவும் பரசவப்படுவதற்கும் நேரம் இருந்தது.

ஆனால், இன்று இந்த இயந்திரமயமான யுகத்தில் அதற்கெல்லாம் நேரம் எங்கே...?

மழைக்காலம் எனது இளமைக்காலத்தின் வசந்தகாலம்தான்.

# தன்முனைக் கவிகள்....

— நரேஸ்

*அலை அலையாய் கவிகள்*
*திரண்டு வருகிறது மனதில்*
*ஒப்புவிக்க முனைகையில்*
*எங்கோ சென்று மறைகிறாய்*

*அடித்து உடைத்து செதுக்கப்பட்டு*
*உருப் பெற்ற கருங்கற்பாறைகள்*
*புகைப்படக் கருவிகளுக்குள்*
*அழகுச் சிலைகளாக*

*களத்திலே பகல் முழுவதும்*
*காளையர் சுமந்த கருவிகளை*
*மாலையில தான் காவிவருகிறான்*
*சுமைகளோடு உழவன்*

*புத்தபிரான் போதனைகள்*
*ஆன்ம அமைதி ஈந்தது*
*அவன் வழி வந்தசிலர்*
*புனிதம் கலைத்தனர்*

*கவிதைகள் புனைந்தன*
*உன் கண் அசைவுகள்*
*கற்றுக் கண்டுணர்வதற்குள்*
*நிறுத்திவிட்டாய் அசைவுகளை*

*கவிதைகள் புனைந்தன*
*உன் கண் அசைவுகள்*
*கற்றுக் கண்டுணர்வதற்குள்*
*நிறுத்திவிட்டாய் அசைவுகளை*

# எதிலும் வெற்றி கொள்வாய் நீ



## கவிதை

*உண்மை என்பது உயர்வு*
*ஊக்கம் என்றால் பெருமை*
*வாய்மை என்றும் நேர்மை*
*தூய்மையானது நல்ல அன்பு*
*தீய கொள்கைகளை வீட்டுவிடு*
*நியாயமானதை முன்னின்று செய்திடு*
*காயம் செய்ய நினையாதே*
*கடமை நெறியில் தவறாதே*
*பாவம் சூழ்ச்சி புரியாதே*
*மோசம் கொண்டும் நடவாதே*
*சாபம் இட்டும் பழகாதே*
*கோபம். காட்டியும் நில்லாதே*
*இம்மையில் என்றும் மகிழ்வுடனே*
*செம்மை நெறியின் வாழ்வுடனே*
*தம்மை. இகழும் நிலையின்றி*
*நம்நாட்டில் நன்றே பயன்பெறுவோம்*
*எண்ணிச் செய்திடு நன்மை*
*எகிறியும் நில்லாதே தீமை*
*ஏற்றம் என்றும் வேண்டுமே*
*எதிலும் வெற்றி கொள்வாய்நீ*

***— சர்வேஸ்வரி சிவரூபன் —***

# தமிழ்க்கலை இலக்கியத்துள் புதிய பிரசவங்கள்

**ஒரே நாளில்**
**ஒரே மேடையில்**
**ஒரே எழுத்தாளரின்**
**மூன்று நூல்கள் வெளியீடு**




அச்சுப் பதிப்பில் வெளிவரும் நூல்களின் வருகைகள் தற்காலத்தின் தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக கைப்பேசி பாவனை அதிகரித்து அதற்குள் அனேகமான மக்கள் மூழ்கிப்போயுள்ள நிலையில் அருகிவிடுமோ என்ற அங்கலாய்ப்பு அனேகமான வாசகர்களின் மனங்களில் குடிகொண்டிருக்கும் இக்காலப்பகுதியில் இப்படி ஒரே நாளில் ஒரே மேடையில் ஒரே ஆளுமையின் எழுத்தாற்றலின் வெளிப்பாடாக வெளிவருவது மட்டற்ற மகிழ்ச்சியை கலை இலக்கிய களத்திலும் வாசகர் மனங்களிலும் ஏற்படுத்தியுள்ளது.

இதன் வெளிப்பாடே இந்த ஆண்டின் வெளியீடுகளாக ஒரே எழுத்தாளரின் மூன்று நூல்கள் **'யாழிசைக் கவித்தடாகத்தின்'** ஏற்பாட்டில் சித்திரை மாதம் 2024ஆம் ஆண்டு 1ஆம் திகதி திங்கட்கிழமை அன்று சுண்ணாகம் பொது நூலக மண்டபத்தில் வெளியீடு செய்யப்பட்டிருக்கின்றமை அமைகிறது

1. ***மகரந்த மணிகள் - கவிதை***
2. ***கவிதை மலர்கள் - கவிதை***
3. ***உதிரிப் பூக்கள் - சிறுகதை***

மேற்படி மூன்று நூல்களும் எழுத்தாளரும் கவிஞருமாகிய **ஜெயாஸ்ரீ** அவர்களால் எழுதி வெளியிடப்பட் டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கவிதை

## மனச்சிறகுக்கு எல்லைகளே இல்லை

~ புவனேஸ்வரி சண்முகநாதன், ஹட்டன் ~

என் மனம் சிறகடித்துப் பறக்கும்
சிந்தைகளால் தேடி சில்லறைகளாய் ஒலிக்கும்
சின்னச் சின்ன நினைவுகளை சீராகக் காட்டும்
சிந்திக்க கணமேனும் சிறகாகிப் பறக்கும்.

வந்து வந்து போகும் எங்கும்
வானம் சென்று வந்திறங்கி வெல்லும்
வைகறையில் வழியெல்லாம்
வலிக்காமல் நடந்து
வாடுகின்ற நிலைவந்தும் வாடாமல் பூக்கும்

சோலைவனம்
சொற்க்கம் என்றே சொல்லி
சொந்தமாகி சோற்வின்றி சொல்லாமல் போகும்
மேகமீது தாகமுடன் மோதியே முட்டி
ஏகமாகி எங்கெங்கும் எல்லைகளைக் கடக்கும்

உச்சிமலை கச்சிதமாய் உரசியே வந்து
பச்சிலைகள் வாசமதை பார்த்தே கதைசொல்லும்
நதியோரம் நாணமுடன் நாணமதைக் காட்டி
நயமாக நட்புகொண்டு
நல்லதையே அள்ளும்

காடுவனம் களிப்பாக கண்விழித்துப் பார்த்து
கதைகதையாய்
புதுமைகளை
காதுகுளிரச் சொல்லும்
நேரகாலம் நிமிடமெல்லாம்
நேசமாக ஏற்று
எல்லைகளோ இல்லாமல் எங்கெங்கும் பறக்கும்.



## பாடாய்(ப்) படுத்தும் ரூபாய் நோட்டுகள்

பணத்தின் காலடியில்,
படிப்பும் விழுகிறது
நாணயம் அற்றவனிடம்
நிலைத்தும் இருக்கிறது
பாசத்திற்கும் நேசத்திற்கும்
பங்கம் வருகிறது
பாசாங்கு செய்திங்கு
பயணிக்க வைக்கிறது
நீதியை மாற்றியே
நிலைகுலையச் செய்கிறது
பாதியில் உறவுகள்
பரிதவித்து நிற்கிறது
உற்றார் உறவுகளை
ஒன்றாக இணைக்கிறது
நற்குணம் சிறிதுமற்று
நயவஞ்சகம் புரிகிறது
பதவியில் இருப்பவனை
பரதேசியாக ஆக்கிறது
உதவிக்கும் பயன்படாது
அடிமையாக நினைக்கிறது

ஜெனனி . மோ

## முதுமை



பருவம் பலவும்
தோன்றி மறையும்
உருவம் கூட
மாறிப் போகும்
முதுமை நிலையை
ஏற்கவே மறுக்கும்
இளமைக் காலம்
இனிப்பாய்த் தோன்றும்
இறைவன் படைப்பில்
இதுவல்லவா புதுமை

அன்பரசு சுமதி



# ஆன்மாவின் பிரக்ஞையில்.. கவிதை

இல்லாமையின் இருப்பைக் காலி செய்கின்றன
நின் நினைவுகள்
மரணித்த பொழுதுகள் எல்லாம் மறந்து விட்டேன்
அந்திம காலத்தைத் துரத்தி
அடித்து துயரங்களைத்
தூர்வாருகிறேன்
சத்தியங்கள் மட்டுமே
பேசுகின்றன மௌனங்கள்
அவை
செவித்துவம் அடைவதும் சாத்தியமாகிறது
பதிலும் மௌனங்களாகி இரட்டைச் சத்தியத்தை ஊர்ஜிதம் செய்யும்
எதிர்பார்ப்புகள்தானே இம்மௌனத்தின் அடித்தளம்
மௌனத்தின் மோதல்களில்
நம் நேசம் சிக்கிக்கொண்டு
வீழ்ப்பது ந்‘டமே
என்ன ஒரே ஒரு வீரல் மட்டும்
தந்திருக்கலாம்,
நிராயுத பாணியாய்
நின்னுடன் யுத்தம் செய்ய வேண்டியிருந்திருக்காது
வேரோடிய நேசம் எனக்குள்ளிருக்கிறது
நீ வெட்ட வெட்டத் தழைப்பேன்
முழுமையாக நீ
மூடிக்கொண்டாலும்
காற்றாகித் திறப்பேன்.
வெளிப்படுத்துவது நேசம் என்றால்
வெளிப்படுத்தாதிருப்பது
சாபமல்ல
நேசம் காத்தல்
ஆதியின் சித்தத்தில்
ஊறிப்போன ஆப்பிள் வாசனை
ஆன்மாவின் பிரக்ஞையில் எழ
எக்காலமெனினும்
உன்னை நுகர்ந்தறிகிறேன்

**Dr. ஜலீலா முஸம்மில்**



## “சூர்ப்பனகையும் ஒரு பவளத்தீவும்“

இக் கவிதைத் தொகுப்பை எழுதி முடித்தபோது என் வாழ்வியலின் வாடை அதில் வீசிக் கொண்டிருப்பதை உணர முடிந்தது. இது என் மனதின் சிறு இளைப்பாறுதல். இதை இழப்புகளின் உச்சத்தில் மனமுடைந்த மூப்பின் பிரதிபலிப்பு என்றும் சொல்ல முடியும். மொத்தத்தில் ஒருவித புரிதலோடு கூடிய இருத்தலுக்கான கொழுகொம்பாகவே என் எழுத்துக்களை நான் கருதுகிறேன்.

**என் தேசத்தின் கதைகளைக் கேட்பதற்கும், சுதந்திர விரும்பியாக சுற்றித் திரிவதற்கும், என் நம்பிக்கை விதையைத் தேடுவதற்கும், ஆண் பெண் பேதங்களைக் கடந்து காதலனாகவோ காதலியாகவோ உலா வருவதற்கும் என் பவளத் தீவில் நீங்கள் நம்பிக்கையோடு கால் பதிக்கலாம்.**

- *நவயுகா -*

*குவேனி எனப்படும் கவினி*

*மேற்குக் கரை மேகங்கள்*
*செஞ்சூரியன் விழுங்கிச்*
*சிவந்திருந்தன*
*ஈழக்காற்று*
*ஈரம் சூடித்*
*திரிந்து கொண்டிருந்தது*
*அவள்*
*வழமை போலத் தன்*
*ரத்தினத் தீவில்*
*சிவந்த மண்ணின்*
*சில்மிச வாசத்தில்*
*நூல் நூற்றுப்*
*பொழுது போக்கிக் கொண்டிருந்தாள்*
*ஆழக்கடல் தாண்டிச்*
*சிங்கப் படகுகள்*
*சில கரை கண்டன*
*அதிசயக் காதல் மூள*
*அவசரக் காமம் கொண்டாள்*
*ஓர் பவளத்தேசம்*
*பறிபோனது !*

## *எழும்பட்டாம்*

*கிரவல் கற்களுக்குள்*
*செருப்பின்றிய பயணம்*
*சைக்கிளில் கட்டிய*
*உரைப்பை*
*அதனுள் சில*
*பத்திரங்களும்*
*பாத்திரங்களும்*
*நாலேக்கர் நிலம்*
*சின்னக் கூரை வீடு*
*பின்னே தோட்டம்*
*எது நட்டாலும் வளரும்*
*வள்ளல் நிலம்*
*கள்ளும் கருவாடும்*
*உண்டு உறங்கிய*
*வேலிக்கரைச்*
*சிறு வடலி*
*“எழும்பட்டாம்” என்றார்கள்*
*பல வருடம்*
*கல்லரிந்து கட்டிய வீடு*
*பல நாள் விரும்பி*
*அன்றைக்கு முளை கண்ட*
*சிறு பயிர்த் தோட்டம்*
*கிரவல் கற்களுக்குள்*
*செருப்பின்றிய பயணம்*
*சைக்கிளில் கட்டிய*
*உரைப்பை*
*அதனுள் சில*
*பத்திரங்களும்*
*பாத்திரங்களும்!*



வ.ரேணுகா தேவி

# வயதானால் எதையும் ஏற்றுக் கொள்ளல் வேண்டும்

**வ**யதான காலத்தில் கற்றுக் கொள்வதை விட ஏற்றுக் கொள்வது தான் அதிகமாக உள்ளது. ஏனென்றால் நமது உணவு பழக்க வழக்கமாகட்டும் மற்றும் அதிகாலை எழுந்து இரவு விரைவிலேயே தூங்கும் பழக்கம் உள்ளவர்கள் நாம். ஆனால் இன்றைய இளைய தலைமுறையோ இரவு வெகு நேரம் கண்விழித்து விட்டு காலை 10 மணிக்கு மேல் எழுவது என்பதெல்லாம் நம்மால் ஏற்றுக் கொள்ள முடியாது ஒன்றாக உள்ளது.

என்னதான் வேலை செய்தாலும் பெண் பிள்ளைகள் ஆண் பிள்ளைகள் என்று பாராது ஒரு நல்ல நாள் விசேடங்கள் என்றும் பாராது தான்தோன்றித்தனமாக வீட்டுக்குள் வளைய வருவதும், எதையும் சிரத்தை எடுத்து செய்து கொள்ளாமல் இருப்பதும் நமக்கு மனச்சங்கடத்தை ஏற்படுத்துகிறது. இதைக் கண்டும் காணாமல் இருப்பதற்கு முடிவதில்லை.

இன்னும் சொல்லப்போனால் பெரியவர்கள் கிடைக்கும் மரியாதை சுதந்திரம் கொடுத்து நாம் வளர்ந்தது போல் நம் பிள்ளைகளும் ஒரு அனுசரித்துத்தான் போகிறார்கள்.

ஆண் பிள்ளைகள் சொல்லவே வேண்டாம் வெளியூரில் வேலை பார்க்கும் மகனோ அல்லது மகள் வீட்டுக்கோ செல்ல வேண்டிய சூழ்நிலை இருந்தால் அதிகபட்சமாக ஒரு வாரத்திற்கு மேல் நம்மால் தாக்கு பிடிக்க முடிவதில்லை. .ஏனென்றால் அவர்களுடைய உணவுப் பழக்க வழக்கம் மட்டுமல்ல நேரம் கடந்து செய்யும் ஒவ்வொரு செயலுமே நாம் இயல்பை மீறி இருப்பது போல ஒரு தோற்றம் நமக்கு ஏற்படுகிறது. எப்போது நம்மை ஊருக்கு அனுப்பி வைப்பார்கள் என்று மனம் எதிர்பார்க்கத் தோன்றுகிறது.

இளைய தலைமுறையோடு இப்பொழுதெல்லாம் நம்மால் ஒத்துப் போக முடிவதில்லை. என்பதுதான் உண்மை கற்றுக் கொள்வதை விட அவர்களின் போக்குக்கு அனுசரித்துத்தான் போகிறோம் என்பதுதான் உண்மை. அதாவது ஒரு சில குறிப்பிட்ட உணவுகள் நமக்கு பிடிக்கிறதோ இல்லையோ அவர்கள் வாங்கித் தரும் பொழுது மனசு நோக கூடாது என்று பிடிக்காவிட்டாலும் சாப்பிட்டு வைக்கிறோம்.

இதுபோல் எத்தனையோ வி'யங்கள் அதுபோல் மால் என்று சொல்லிக்கொண்டு அடிக்கடி செல்வார்கள் பாருங்கள். அங்கு போய் நம்ம எதை பார்க்கப் போகிறோம் என்று தெரியாது. ஆனால் நம்மை விடவும் மாட்டார்கள் அவர்களோடு செல்லும் பொழுது ஒரு வித்தியாசமான இடத்திற்கு வந்ததை போல் தான் உணர்வுகள் நமக்கு ஏற்படுகிறது. ஆதலால் கற்றுக் கொள்வதை விட அனுசரித்துப் போகிறோம். என்பது தான் உண்மை.

## முதுமை உருவ மாற்றமே உணர்வு மாற்றமல்ல

கட்டுப்படித்தனமாகவோ அடிமைத்தனமாகவோ இருக்க வேண்டாம் என்று நினைத்து நாம் கொடுத்த

சுதந்திரம் அளவுக்கதிகமான சலுகைகள் எமக்கு சற்று சங்கடத்தை தான் ஏற்படுத்துகிறது. வெளியூர் சென்றாலோ அல்லது உறவினர்கள் வீட்டுக்கு செல்லலாம் என்று நினைத்தாலோ எங்கும் வருவதற்கு விரும்புவதில்லை.

குறிப்பாக சொல்லப் போனால் வீட்டில் சமைப்பது என்பது கூட அரிதாக போகிவிட்டது சுய சம்பாத்தியம் அவர்களுக்கு ஒரு தோதாகவும் உள்ளது மேலும் ஆண்களை சாராது இருப்பதால் அவர்களும் இவர்களுடைய போக்குக்கு அதைவிட தனக்குத்தான் எல்லாம் தெரியும். எனக்கூறி நம்மிடம் ஆலோசனை கேட்காது ஏதாவது அபத்தமாக செய்தாலும் சின்ன சிரிப்போடு நாமும் தலையாட்டி வைப்போம். அந்த செயல் தோற்றபோதும் அதையும் பார்த்து அசட்டுத்தனமாக சிரித்து வைப்போம்.

முக்கியமாக குழந்தை வளர்ப்பு ஒருசில குடும்பங்களில் அவர்களைப் படுத்தும்பாடு உள்ளதே. படிப்பாகட்டும் உடைகளாகட்டும் எல்லாவற்றிலுமே ஆடம்பரம்தான். பெரியோர்களின் பேச்சு அங்கு எடுபடுவது இல்லை.இன்னும் சொல்லப்போனால் சுயசம்பாத்தியம் இல்லாத வயதானவர்கள். கௌரவப் பிச்சைக்காரர்கள் என்பதுதான் உண்மை.

# அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச் சங்கம் நடாத்திய, இலங்கைப் படைப்பாளாகளின் வெளியீடுகளுக்கான போட்டியில் பரிசு பெற்ற இலங்கை ஆளுமைகள்


அவுஸ்திரேலியா நாட்டில் நீண்ட காலமாக இயங்கி வருகின்ற 'அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கம்' ஆண்டுதோறும் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக போட்டிகளை அறிவித்து அதில் வெற்றிபெறுபவர்களுக்கு பரிசில்களையும் விருதுகளையும் வழங்கிவருவது வழக்கம்.

இந்த நடைமுறைக்கமைவாக அண்மையில் இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்குமுகமாக இலக்கியப் போட்டி ஒன்றை அறிவித்திருந்தது. சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை போன்ற பிரிவுகளில் 2022ஆம் ஆண்டில் வெளிவந்த நூல்களுக்கான போட்டியாக இது ஊடகங்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டிருந்தது.




இதன்பிரகாரம் போட்டியில் பங்குபற்றிய ஆளுமைகளின் நூல்களில் நடுவர்களின் இறுதித் தீர்ப்புக்கமைவாக தெரிவுசெய்யப்பட்டு வெற்றிபெற்ற நல்கள் அண்மையில் 'அவுஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தினால்' அறிவிக்கப்பட்டிருக்கிறது.


இதன் பிரகாரம் ஒரு சிறுகதைத் தொகுப்பும், ஒரு நாவலும் ஒரு கவிதைத் தொகுப்பும் வெற்றிபெற்ற நாலகளாக அறிவிக்கப்பட்டுள்ளது. இம்முறை கட்டுரைக்கான நூல்கள் எவையும் கிடைக்கப் பெறாமையால் கட்டுரைத் தொகுப்புக்கான பரிசில்கள் ஏதும் அறிவிக்கமுடியாமல் போனதாக அறியக்கிடைக்கிறது.




வெற்றிபெற்ற நூல்களுள் ஆளுமை மாத்தளை வடிவேலன் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 'வல்லமை தாராயோ' என்ற சிறுகதைத்தொகுப்பும்,

ஆளுமை எஸ். ஏ. உபைதுல்லா அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 'வேராகிப்போன மனிதர்கள்' என்ற நாவலும்,

ஆளுமை திருக்கோவில் கார்த்திகேசு அவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட 'கடிகாரப் பறவைகள்' என்ற கவிதைத் தொகுப்பு நூலும் தெரிவு செய்யப்பட்டு அறிவிக்கப்பட்ட நூல்களாகும். இவர்களுக்கான பரிசுப்பணம் இலங்கை நாணயத்தில் ஊருபா 50 ஆயிரமும் சான்றிதழும் ஏப்ரல் மாதத்தின் நடுப்பகுதியில் அனுப்பிவைக்கப்படும் என தெரிவிக்கப்படுகிறது.




இவர்களுக்கான பரிசில்களை அவுஸ்திரேலிய சமூகப்பணியாளர் (அமரர்) திருமதி மகாதேவி ஜெயமணி முருகையா நினைவுப்பரிசை திருமதி துளசி முருகையா அவர்களும், முன்நாள் இலங்கை அமைச்சர் ஏ. ஆர். மன்சூர் நினைவுப் பரிசை சட்டத்தரணி திருமதி. மரியம் நளிமுடீன் அவர்களும், அவுஸ்திரேலிய மெல்பன் 3 ஊ சு வானொலி தமிழ்க்குரல் ஏடகவியலாளர் அமரர் சண்முகம் சபேசன் நினைவுப்பரிசை திருமதி சிவமலர் சபேசன் அவர்களும் வழங்கிவைக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# பெண்ணே பெருமை கொள்ளும் குலவிளக்கு

**வீ**ட்டுக்குள்ளே பெண்ணவள் இருந்த காலம்கடந்தது

தனித்துவமாக சிறக்கும் நிலையும் எய்தது. வானமளந்த பெண்ணாகப் பவனிவருகிறாள் பெண்கள் இன்று பாரினிலே எதைச்செய்யவில்லை.

மகளாய் மனைவியாய் தாயாய் சோதரியாய் மட்டும் இருந்துவிடவில்லை. மானிலம் போற்றி நிற்க அவள் பேரொளியாகினாள். சமூகவேலைகள் மட்டுமல்ல சாதனை கொண்டவளாக வலம் வருகிறாள்.

விமான ஓட்டியாக, ஜனாதிபதியாக, சட்டத்தரணியாக, வைத்தியராக, அரச அதிகாரியாகவென்று அதி உயர்வான பதவிகள் அணைத்திலும் அவளின் ஆற்றலும் ஆழுமைப்படுத்தலும் வெளிவருவது ஐயம் இன்றி உண்மையாகின்றது.

உறுதிகொண்ட பெண்ணினாய் வா…வா… உணர்வுடனே உலக மத்தியிலே உயர்ந்து நிற்பது உண்மையின் கூற்று விளையாட்டுத்துறையிலும் அவள் பின்தங்கிவிடவில்லை. வாள்வீச்சு மல்யுத்தம் எனப்படும் வீரசகாப்தங்களிலும் அவளின் திறமை சரிதைகளாக உருவாகின்றன.

அடிமை விலங்கினை அறுத்தெறி பெண்ணே, உலகத்தின் கண்ணெனப் பெண்மையைப் போற்றிய பாரதி இன்று இல்லை என்றாலும் அவன் பெண்ணின் விடுதலைக்கு வித்திட்ட மகாகவியாச்சே பெண்ணவள் இன்று எதை செய்யவில்லை. தன்மானச்சிங்கங்களாய் வலம் வரும் சிங்கப்பெண்களல்லவா. அவளின் மான்புமிகு வரலாறுகளே எடுத்துக்காட்டாடுகளாக அமைந்துவிட்டன். ஆவதும் ஆனதும் ஆகுதி யாய் தம்மை அற்பணித்தே தாய்மை என்கின்ற குலமாதா ஆகுகின்றாள்

இந்தப்பாரின் ஒளிவிளக்கும் விடிவெள்ளியும் அவளாகப் படுகின்றாள். அன்றுதொட்டு இன்றுவரை அவள் ஒரு சுடரொளி, போற்றுதலுக்குரிய பொக்கிசம், நிறைகுடம் ஒருபோதும் தளும்பாது. தரணியில் தளராமல் தயங்காது திறமையாக தீரத்துடன் வழியேகும் ஒரு தலைவிருட்சம் பெண்ணென்பதில் சந்தேகம் இல்லை.

**அறிவாற்றல் கொண்டவளேயென்று சொல்லி நீயொரு கும்மிகொட்டு**

**நிமிர்திட வழிசெய்யும் கருணைமாதா வென்றெண்ணியொரு பாடலிசை**

**வழியதுனக்கு காட்டிய வண்ணச்சிலையென்றெண்ணி வழிபடு**

**வையம் சிறந்திட நிற்கவைப்பவளென்றெண்ணிப் போற்றிடு.**

அப்போதெல்லாம் பெண்ணின் பெருமை துலங்கிடும் நன்றே

என்றோ எப்போதோ என்றெண்ணிவிடாதே

இன்றும் அன்றும் பெண் பெருமைக்கு உரியவள்.

**'கோமாதா குலமாத குவலயத்தின் அருள்மாதா'**

இந்த உண்மை உலகறிந்த உண்மை.

# புத்தக வெளியீடு

## கனடா, ரொறன்ரோவில் புத்தக வெளியீட்டு விழா

**– சுலோச்சனா அருண் –**

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தால் சென்ற சனிக்கிழமை ஏப்ரல் மாதம் 20 ஆம் திகதி தமிழகக் கவிஞர் மு. முருகேஸ் அவர்களால் தொகுக்கப் பெற்ற 'மனதைத் தொட்ட எழுத்தின் பக்கங்கள்' என்ற நூலும், எழுத்தாளர் குரு அரவிந்தனின் 'சாக்லட் பெண்ணும் பண்ணைவீடும்,' 'யாதுமாகி நின்றவள்' என்ற சிறுகதைத் தொகுப்பும், மாலினி அரவிந்தனை இணையாசிரியராகக் கொண்ட 'தமிழ் ஆரம் - 2024' சிறுவர்களுக்கான சிறப்பு மலரும் வெளியிட்டு வைக்கப் பெற்றன. கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் கவிஞர் அகணி சுரேஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பெற்றோர், ஆசிரியர், மற்றும் தமிழ் இலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்து சிறப்பித்தனர்.



மங்கள விளக்கேற்றியதைத் தொடர்ந்து கனடா தேசியப் பண், தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியன செல்வி சோலை இராச்குமார், செல்வி சென்னி இராச்குமார் ஆகியோரால் இசைக்கப்பெற்றன. தொடர்ந்து கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் திரு. அகணி சுரேஸ் அவர்களின் தலைமையுரை இடம் பெற்றது. அவர் தனது உரையில் 'உலகப் புத்தகத் தினத்தைக் கொண்டாடும் இந்த வாரத்தில் எழுத்தாளர் இணையம் இந்த நூல்களை வெளியிட்டு வைப்பதில் மகிழ்ச்சி கொள்வதாகவும், கனடிய எழுத்தாளர்களுக்கு முன்னுதாரணமாக இருக்கும் எழுத்தாளர் குரு அரவிந்தனைப் போல ஏனைய எழுத்தாளர்களும் தங்கள் ஆக்கங்களை வெளியிட முன்வரவேண்டும்' என்றும் குறிப்பிட்டார்.

'மனதைத் தொட்ட எழுத்தின் பக்கங்கள்' மற்றும் 'சாக்லட் பெண்ணும் பண்ணைவீடும்' ஆகிய நூல்களுக்கான வெளியீட்டுரையைத் திருமதி சசிகலா ஜீவன்ராம் அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர் தனது வெளியீட்டுரையில், கவிஞர் மு. முருகேஸ் அவர்களால் தொகுத்து வெளியிடப்பெற்ற இந்த நூலில் இலங்கை, இந்தியா, கனடாவைச் சேர்ந்த 21 பிரபல எழுத்தாளர்களும், பேராசிரியர்களும், திறனாய்வாளர்களும் ஒன்று சேர்ந்து குரு அரவிந்தனின் எழுத்துக்கள் பற்றித் தங்கள் பன்முகப் பார்வையை இந்த நூலில் எழுத்தில் வடித்திருப்பதாகக் குறிப்பிட்டார். மேலும் குரு அரவிந்தனின் சிறுகதைத் தொகுப்பான சாக்லட் பெண்ணும் பண்ணை வீடும் பற்றிக் குறிப்பிடும் போது, ஆங்கில மொழி



மாற்றுக் கதைகளையே வாசித்து வந்த எங்களுக்கு முதன் முதலாகக் குரு அரவிந்தன் அவர்கள் நேரடியாகவே தமிழில் தந்திருக்கும் இந்த வெளிநாட்டுக் கதைகள் அற்புதமானவை, அதற்காக அவரைப் பாராட்டுகின்றேன் என்று குறிப்பிட்டார்.

அடுத்து கனடா எழுத்தாளர் இணையத்தின் பொருளாளரும், எழுத்தாளருமான கனகசபை ரவீந்திரநாதன் 'யாதுமாகி நின்றவள்' என்ற சிறுகதைத் தொகுப்புக்கான வெளியீட்டுரையை நிகழ்த்தினார். சங்க இலக்கியப் பாடல் வரிகளை எடுத்து நவீன கதைகளை உருவாக்கியிருப்பது ஆச்சரியப்பட வைப்பதாகவும், அதே நேரத்தில் கொரோனா காலத்துக் கதைகள் அந்த இழப்பை நினைத்து அழவைப்பதாகவும் குறிப்பிட்டார்.




அடுத்து தமிழ் ஆரம் - 2024 சிறப்பு மலர் பற்றி வெளியீட்டுரை நிகழ்த்திய இளைய தலைமுறையினரான செல்வி. அர்ச்சயா வீரபத்திர ஐயர் தனது உரையில் சிறுவர்களுக்கும், இளைய தலைமுறையினருக்குமான இது போன்ற தமிழ் சார்ந்த இதழ்கள் தொடர்ந்தும் வெளிவரவேண்டும் என்பதைக் குறிப்பிட்டுப் பெற்றோர் ஆசிரியர்களின் ஒத்துழைப்பு இதற்கு மிகவும் அவசியமனது என்பதையும் குறிப்பிட்டார்.

# துளிப்பாக்கள் - நரேஸ் -

*தேயிலைக் கூடைகள்*
*நிரம்பி வழிகிறது*
*தொழிலாளர் கண்ணீர்*

*வயலில் நெற்கதிர்கள்*
*தலை சாய்த்து காத்திருக்கும்*
*கூலிகோரும் தொழிலாளி*

*மண்சுமந்த மக்கள்*
*வரிசையாக காத்திருக்கிறார்கள்*
*தோட்ட வாசல்களில்*

*ஏழையின் கண்கள்*
*ஆனந்தக்கண்ணீர் சொரிகிறது*
*ஆழ்ந்த உறக்கத்தில்*


*ஏழைத் தொழிலாளி*
*மகிழ்சியால் முத்தமிடுகிறான்*
*மழைத்துளிகளுக்கு*

*கூவி விற்கும் தொழிலாளி*
*பேரம் பேசுகிறார்*
*மொத்த விற்பனையாளர்*

# ‘வலி மறக்கும் வழிகள் ‘கவிதைத் தொகுப்பு

**தி**ருமலை நகரின் புனித சூசையப்பர் கல்லூரியின் சாதாரணத்தில் பயிலும் மாணவன் மகேஷன் மாதேஷ் அண்மைஙயில் தனது கவிப்படைப்புகளைத் தொகுத்து நூலுருவாக்கி வலி மறக்கும் வழிகள் என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்

திருமலை நகரின் இளஞ் சிட்டொன்று
கவிஞனாய் பிறந்ததன்றோ
சின்னஞ் சிறுவயதில்
பெற்றோரை இழந்து அவர்
பாசம் அறிந்திடா மழலை
புனித சூசையப்பர் கல்லூரியின்
சாதரண தரம் பயிலும்
மாணவச் செல்வன்
கல்வி வழி செல்கையில்
இதயம் தொட்ட நிகழ்வுகளை
மனம் கவர்ந்த இரசனைகளை
உள்ளத்தில் ஓடிய அநுபவங்களை
தன் பேனா முனைகொண்டு
கவி வரிகளால் வரைந்து
அழகிய கவியுருவாக்கி
கவித் தொகுப்பாய் வெளியிட்டு
கவிஞனாய் சாதித்தான் வாழி
வாழ்க... வாழ்க... நின் புலமை வாழ்க...
இன்னும் பல சாதனைகளை
படைப்புலகில் நிகழ்த்த வாழ்த்துகள்



# இலங்கையில் முதன் முதலாக வெளிவந்த தமிழ்ப்பத்திரிகை

**- தமிழ்ப்பாணன் -**

முன்பு ஒரு காலத்தில் பத்திரிகைகள் என்று ஏதும் இருந்ததில்லை. எல்லா தகவல்களுமே அநேகமாக வாய் வழியாகவே பரவி வந்தன என்பது யாவரும் அறிந்ததே. கட்டுரைகள், கவிதைகள், கதைகள், வரலாறுகள் மற்றும் தகவல் பதிவுகள் போன்றவை வாய்வழியாகவும், கல்வெட்டுக்களாகவும் செதுக்கப்பட்டிருந்தன அன்றேல் ஓலைச் சுவடிகளில் எழுத்தாணியினால் செதுக்கப்பட்டிருந்தன. இவையே அக்காலத்தில் வழக்கத்திலிருந்த எழுத்தூடகங்களாக இருந்தமை நான் சொல்லி தெரிந்துகொள்ளவேண்டியதில்லை. இவை கூட பெருமளவில் இல்லாது குறிப்பிடக் கூடிய சில பிரமுகர்களால் மிகச்சொற்ப அழவிலேயே அந்த நாட்களில் உருவாக்கப்பட்டன என்று சொன்னால் அது மிகையாகாது. இவ்வாறு உருவாக்கப்பட்டவை அனைத்தும் அனேகமாக ஒரேயொரு பிரதியாக மட்டுமே உருவாக்கப்பட்டிருந்தன. இந்த காரணத்தால் பல்வேறு வகையான வரலாற்று முக்கியத்துவவம் வாய்ந்த பல தகவல்கள் மற்றும் வரலாறுகள் இன்றும் கிடைத்தற்கரியனவாக காணப்படுகின்றன.

ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு பின்னரே கடதாசிகளிலான பதிப்புக்கள் இடம் பெறவும் வெளிவரவும் தொடங்கின. இவ்வாறு கடதாசியினாலான பதிப்புகள் இடம்பெற ஆரம்பித்த சில காலங்களின் பின்னரே செய்திப் பத்திரிகை வடிவிலான பத்திரிகைகள் உதயமாகின. ஆரம்பத்தில் ஆங்கிலம் முதலான வேற்று மொழிகளிலேயே பத்திரிகைகள் வெளிவர ஆரம்பித்தன. இலங்கையிலும் அந்நியர்களின் கோலோச்சதிகாரம் காரணமாக ஆரம்பத்தில் ஆங்கில பத்திரிகைகளே ஆரம்பித்திருந்தன. இவற்றுள் இலங்கை **'அரசாங்க வர்த்தமானி'** 1802ஆம் ஆண்டில் வெளிவரத் தொடங்கியது. 1834இல் **'ஒப்சேவர் அன்ட் கொமர்சியல் அட்வடைசர்ஸ்'** என்ற பத்திரிகையும் 1837இல் **'சிலோன் குறோனிக்கல்'** என்ற பத்திரிகையும் ஆரம்பிக்கப்பட்டு வெளிவந்து கொண்டிருந்தன. இவை யாவும் ஆங்கில மொழியிலே வெளிவந்ததோடு ஒரு குறிப்பிட்ட வட்டத்தினருக்குள்தான் பரிமாற்றத்திலிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.



இக்காலப் பகுதியில் தமிழ் பத்திரிகை ஒன்றின் முக்கியத்துவம் இலங்கையில் செயல்பட்டுவந்த அமெரிக்க மிசனரிமாரின் எண்ணத்தில் தோன்றவே அவர்கள் தமிழ் பத்திரிகை ஒன்றை உருவாக்கும் முயற்சியில் இறங்கினர். இந்த முயற்சியின் பயனாக இலங்கையில் முதன் முதலில் வெளிவந்த தமிழ் பத்திரிகை எனும் அந்தஸ்தை **"உதய தாரகை"** என்னும் பத்திரிகை பெற்றது. அது மட்டுமல்ல இதுவே உலகத்தின் இரண்டாவது தமிழ் பத்திரிகையும் யாழ்ப்பாணத்தின் முதலாவது தமிழ் செய்திப் பத்திரிகையும் என்ற அந்தஸ்தையும் பெற்றது. தென் இந்தியாவில் **'தமிழ் பத்திரிகை'** எனும் பெயரில் ஒரு பத்திரிகை ஏற்கனவே சென்னை துண்டுப்பிரசுரக் கழகத்தினரால் வெளியிடப்பட்டமையே **'உதயாதாரகை'** பத்திரிகை உலகின் இரண்டாவது தமிழ் பத்திரிகை என்ற இடத்தை பெற்றுக்கொள்வதற்கு காரணமாக இருந்து என தகவல்கள் தெரிவிக்கின்றன. **'உதயதாரகை'** எனப்படும் இப்பத்திரிகை 1841ஆம் ஆண்டு தை மாதம் 7ஆம் திகதி அமெரிக்க மிசன் எனப்படுகின்ற அந்த அமைப்பினால் வெளியிடப்பட்டது. இந்தப்பத்திரிகை ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டு மொழிகளிலும் வெளியிடப்பட்டது. இந்தப் பத்திரிகை பிற்காலத்தில் வாரத்துக்கு ஒரு முறை வெளியிடப்பட்டது ஆயினும் ஆரம்பத்தில் இரண்டு வாரங்களுக்கு ஒரு முறை வியாழக்கிழமை நாளில் வெளிவந்ததாக அறியக்கிடைக்கிறது. **'உதய தாரகை'** பத்திரிகையானது ஆங்கிலத்தில் **'மோர்ணிங் ஸ்டார்'** (Morning Star) என்ற பெயர்கொண்டு அழைக்கப்பட்டதோடு **'மோர்ணிங் ஸ்டார்'** என்ற பெயர் ஆங்கில ஆக்கங்கள் வெளிவந்த பக்கங்களின் பத்திரிகைக்குரிய பெயராக வழங்கப்பட்டு வந்தது.

இந்தப் பத்திரிகையின் ஆரம்ப கால ஆசிரியர்களாக இருந்தவர்கள் வட்டுக் கோட்டை செமினரியின் **'ஹென்றி மார்டீன்'** என்ற ஆங்கில ஆசிரியரும் **'செத்பெய்சன்'** என்ற தமிழ் ஆசிரியருமாவர். 'செத்பெய்சன்

யாழ்பாணத்தவர். இந்தப்பத்திரிகை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட சில பத்திரிகைகள் ஆங்கிலேயர்களாலேயே ஆரம்பிக்கப்பட்டதாகவும் இந்தப்பத்திரிகையே முதன் முதலாக இலங்கையர்களால் ஆரம்பிக்கப்பட்ட பத்திரிகை என்பதும் குறிப்பிடத்தக்கது. முற்காலத்தில் பிரபலமான எழுத்தாளர்களாகவிருந்த **கரோல் விசுவநாதபிள்ளை** மற்றும் **ஆணல்ட் சதாசிவம்பிள்ளை** போன்றவர்களும் இதன் ஆசிரியர்களாக இருந்துள்ளனர்.

'உதய தாரகை' பத்திரிகையின் வரவானது மக்களினுடைய வாசிக்கும் பழக்கத்தை தோற்றுவித்தமையிலும் ஊக்குவித்தமையிலும் பெரும் பங்காற்றியது. அதன் மூலமாக இப்பத்திரிகையின் முதலாவது வெளியீட்டில் ஆசிரியர் குறிப்பிட்ட விடயங்கள் அடையப்பட்டன என்பதும் மிகப் பொருத்தமானதே. ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் இதனுடை சந்தாதாரர்களின் எண்ணிக்கை 800ஐ எட்டியிருந்தது என தகவல்கள் தெரிவிக்கின்ற அதேவேளை இந்த எண்ணிக்கை அந்த ஆரம்பகாலத்திலேயே மிகப் பெரும் எண்ணிக்கையிலான வாசகர் இருந்திருப்பதை கட்டியம் கூறி நிற்கின்றது. வாசகர்களின் அதிகரிப்பும் ஏனைய மதங்களைச் சார்ந்த மக்களின் வாசிக்கும் பழக்கத்தில் ஏற்பட்ட ஆர்வமும் மிசனரிமார்களின் ஆக்கங்களுக்கு மட்டும் என்ற கட்டுப்பாடு ஏதும் இல்லாது ஏனையவர்களின் ஆக்கங்களும் இப்பத்திரிகையில் வெளிவருவதற்கான ஒரு களத்தையும் ஏற்படுத்தியிருந்தது.

ஆரம்பத்தில் தெல்லிப்பளையிலிருந்து வெளியிடப்பட்ட இப்பத்திரிகை 1985 காலப்பகுதியில் யாழ் 1ஆம் குறுக்குத்தெரு வேம்படி மகளிர் பாடசாலைக்கு எதிரிலும் பின்னர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாண கல்லூரிக்கு முன்பாகவும் அதனது அமெரிக்க மிசன் பதிப்பகத்திலிருந்து வெளிவந்தமை குறிப்பிடத் தக்கது. முன்னர் இந்த பத்திரிகை அதனுடைய செய்திகளை வெளியிடுவதில் காட்டிய கரிசனை பத்திரிகையின்

# இலங்கையின் முதலாவது தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

"சத்திய வேத பாதுகாவலன்" ("The Catholic Guardian") என்பது இலங்கையின் கத்தோலிக்க திருச்சபையினால் ஆரம்பிக்கப்பட்ட கத்தோலிக்க சமயத்தின் பரப்புரைக்கான பத்திரிகையாகும். இது 1876ஆம் ஆண்டு மாசி மாதம் 19ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டது. இதுவே இலங்கையின் முதலாவது தமிழ் கத்தோலிக்க பத்திரிகை ஆகும். ஆரம்பத்தில் "சத்திய வேத பாதுகாவலன்" என்ற பெயரில் வெளியிடப்பட்டுவந்த இந்தப்பத்திரிகை பின்னர் "பாதுகாவலன்" என்னும் பெயரில் பெயர் மாற்றப்பட்டு வெளிவந்தது. இந்த பத்திரிகையானது ஆரம்பத்தில் இரண்டு வாரங்களுக்கு ஒருமுறை வெளிவரும் பத்திரிகையாவே இருந்தது ஆயினும் பின்னர் வாரம் ஒரு முறை வெளிவரும் வாரப்பத்திரிகையாக வெளிவர ஆரம்பித்தது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தப்பத்திரிகை ஆரம்பிக்க முன்னர் "உதய தாரகை" என்று ஒரு பத்திரிகை அமெரிக்க மிசனால் வெளியிடப்படத் தொடங்கியமை குறிப்பிடத்தக்கது அதுவே இலங்கையின் முதலாவது தமிழ்ப்பத்திரிகை என குறிப்பிடப்படுகிறது. பாதுகாவலன் பத்திரிகையின் முதலாவது ஆசிரியராக பிலிப் ஈ முருகப்பா என்பவர் கடமையாற்றியிருந்தார். இது கத்தோலிக்க திருச்சபையின் யாழ் மறைமாவட்டத்திலிருந்தே வெளிவருகின்றமை கவனத்தில் கொள்ளப்படவேண்டியதாகும். கத்தோலிக்க திருச்சபையின் யாழ் மாவட்டத்தில் இருக்கக்கூடிய புனித சூசையப்பர் அச்சகத்திலேயே இப்பத்திரிகை அச்சிட்டு வெளியிடப்படுகின்றமையும் 1981 ஆம் ஆண்டுகளில் அப்போது இதன் இயக்குனராக இருந்த அருட் தந்தை அன்டன் மத்தாயஸ் அடிகளாரின் முயற்சியினால் இந்த அச்சகம் நவீன இயந்திரங்கள் பொருத்தி உயர்நிலைப்படுத்தப்பட்டதோடு பாதுகாவலன் பத்திரிகையும் மேலும் புதுப்பொலிவுடன் வெளிவர ஆரம்பித்தது. இப்பத்திரிகையானது தற்போதும் புதுப் பொலிவுடன் பல வர்ணப் பத்திரிகையாக வெளிவந்துகொண்டு இருப்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாமல் "பாதுகாவலன்" பத்திரிகையானது தற்போது மின்நூல் வடிவிலான கணணிமயப்படுத்தப்பட்ட பத்திரிகையாகவும் தனக்கென ஒரு தனியான இணையத்தளத்தில் வெளிவந்துகொண்டிருக்கிறது.